
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 14 திங்கட்கிழமை (28~05~2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:183



40 பௌத்த அமைப்புகளின் சம்மேளனம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய அவசரக் கூட்டத்தில் திரண்டிருந்த பௌத்த பிக்குமாரில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கவோ, அன்றி அந்த அமைப்புடன் பேச்சு நடத்தவோ கூடாது என்று இந்தக் கூட்டத்தில் பௌத்த பிக்குகள் தீர்மானம் நிறைவேற்றியது தெரிந்ததே. (ஐ)

## தடையை நீக்க மறுக்கும் அரசின் அறிவிப்புக்கு

# விடுதலைப் புலிகளின் பதில் அறிக்கை இன்று

லண்டன்,மே28

**நேரடிப் பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்படமாட்டாது என ஸ்ரீலங்கா அரசு விடுத்திருக்கும் அறிவிப்புக்கு புலிகளின் பதில் இன்று அறிக்கை வடிவில் வெளியிடப்படும்.**

வன்னியில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்திலிருந்து இந்த அறிக்கை இன்று வெளியிடப்படும் என புலிகளுடன் தொடர்புடைய லண்டன் வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

"தடையை நீக்கச் சொல்லிக் கோருவது பேச்சுக்கு முன்நிபந்தனையல்ல. இரு தரப்பும் ஒரு மேசையில் இருந்து சம அந்தஸ்துடன் பேசுவதற்கான நிலைமையை ஏற்படுத்துவதற்கு அது அவசியம்" - என்பதைப் புலிகளின் அறிக்கை விரிவாக விளக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பேச்சை ஆரம்பிக்க முன்னர், புலிகள் மீதான தடையை நீக்க முடியாது என்ற சாரப்பட அரசாங்கம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கைக்கு இன்று வெளியிடப்படும் புலிகளின் அறிக்கை பதிலடியாக இருக்கும் என்றும் புலிகளுடன் தொடர்புடைய லண்டன் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

## தென்மராட்சி நிலைமை குறித்து விடுதலைப் புலிகள் அறிக்கை.

வவுனியா,மே28

தென்மராட்சி நிலைமை தொடர்பாக விடுதலைப் புலிகள் 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

பொதுமக்களை மனித கேடயமாக்கி தென்மராட்சியில் தனது படைகளை நிலைநிறுத்த ஸ்ரீலங்கா அரசு விரித்துள்ள சூழ்ச்சி வலையில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்று புலிகள் மக்களை அறிவுறுத்தி உள்ளனர்.

தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை அங்கு மீளக் குடியமர வேண்டாம் என்றும் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து தங்கியுள்ள பகுதிகளிலேயே இருக்குமாறும் புலிகள் கேட்டுள்ளனர்.

தென்மராட்சியில் பொதுமக்களை வந்து குடியேறுமாறும், சாவகச்சேரியில் கடைகளைத் திறக்குமாறும் ஸ்ரீலங்கா இராணுவம் அழைப்பு விடுத்து வருகிறது.

தனது படை நடவடிக்கைகளுக்கு வசதியாகத் தென்மராட்சியில் மக்கள் குடியமர்வதையும் நடமாடுவதையும் முன்னர் தடை செய்திருந்த இராணுவம் தற்போது 'அக்கினிச் சுவாலை' நடவடிக்கை தோல்வியடைந்த நிலையில் தம்மை தென்மராட்சியில் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ளும் நோக

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு வெளிநாட்டு ஆதரவு பெற முயற்சி

### ரணில் இந்தியா, அமெரிக்கா செல்வார்

கொழும்பு,மே28

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் வக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் முதலாம் திகதி இந்தியா செல்கிறார். அங்கு அவர் பிரதமர் அடல் பிஹாரி வாஜபாயைச் சந்திப்பார்.

சமாதான நடவடிக்கைகள், அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பன தொடர்பாக ரணில் இந்தியத் தலைவர்களுடன் பேசுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் -

ரணில் விக்கிரமசிங்கவின் அமெரிக்க விஜயமும் ஜூன் மாதத்திலேயே இடம்பெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் எதிர்வரும் ஓகஸ்ட்டிலேயே அமெரிக்கா செல்லவிருந்தார் என்றும் -

ஆனால் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நடாளுமன்றத்தில் ஜூலை மாதமே விவாதிக்கப்படவிருப்பதால் அவர் தனது அமெரிக்க விஜயத்தை முன்கூட்டியே ஜூன் மாதத்தில் மேற்கொள்வார் என்றும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு விளக்குவதற்காகவே ரணில் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்ளவுள்ளார்.

தற்போதைய அரசு தோற்கடிக்கப்பட்டாலும் விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் பாதிப்படையாது என்று ரணில் வெளிநாட்டுத் தலைவர்களிடம் தெரிவிப்பார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ-20-9)



திருமலை ஹபரண வீதியில் - தம்பலகாமத்திற்கு அருகே 97 ஆம் வாய்க்கால் பகுதியில் கடற்படையினரை ஏற்றிச்சென்ற பஸ் மீது கடந்த புதனன்று கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது தெரிந்ததே. இதில் 20 கடற்படையினர் பலியாகினர். கண்ணியில் சிக்கிய பஸ் தகர்ந்துபோய் வீதியோரம் தூக்கி வீசப்பட்டுக்கிடக்கின்ற காட்சி. (ஐ)

## ஜெயலலிதாவுடன் டக்ளஸ் பேசுவார்

கொழும்பு,மே28

கச்சதீவு விவகாரம் தொடர்பாக தமிழகத்தின் புதிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுடன் பேச்சு நடத்தப்போவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார்.

கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அ.தி.மு.க. அரசு அதன் கொள்கைப் பிரகடனத்தில் தெரிவித்துள்ளது.

அது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு கூறியதாக கொழும்புச் செய்தியூடகம் ஒன்று தெரிவித்தது. (ஐ-9)

## முஸ்லிம்களுக்கு தனி மாவட்டமா?

## அம்பாறை நகரில் நேற்று சிங்களவர்கள் ஆர்ப்பாட்டம்

அம்பாறை,மே28

கிழக்கிலங்கையில் முஸ்லிம்களுக்கெனத் தனியான மாவட்டம் ஒன்றை உருவாக்க எடுக்கபபட்டு வரும நடவடிக்கைகளைக் கண்டித்து அம்பாறை நகரில் நேற்று சிங்களவர்கள் திரண்டு பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

திகாமடுல்ல வெகுஜன அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்தப் பேரணியில் 6 ஆயிரத்துக்கும் அதிகமான சிங்களவர்கள் கலந்து கொண்டனர்.

அம்பாறைச் சந்தியில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி மணிக்கூண்டுச் சந்திவரை சென்றடைந்ததும், சுமார் அரைமணி நேரம் அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

இநதப் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் காரணமாக அம்பாறை நகரப் பகுதி நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டது. கடைகள் பூட்டப்பட்டிருந்தன. சந்தைகள் இயங்கவில்லை.

இதற்கிடையில் -

கிழக்கில் முஸ்லிம்களுக்கெனத் தனியான மாவட்டம் ஒன்றை அமைப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு ஐ.தே.கட்சி உட்பட சகல தமிழ்க்கட்சிகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. (ஐ-7-9)

## வடமராட்சி வடக்கு மீனவரின் உண்ணாவிரதம் நேற்று முடிவு

வடமராட்சி,மே28

சககோட்டை தொடக்கம் தொண்டமனாறு வரையிலான கடற்பகுதியில் மீன்பிடிக்க அனுமதி வழங்குமாறு கோரி வடமராட்சி வடக்குப் பிரதேச மீனவர்கள் நேற்று முன்தினம் ஆரம்பித்த உண்ணாவிரதம் இரண்டாவது நாளான நேற்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

உண்ணாவிரதம் நடைபெற்ற வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயப் பகுதிக்குச் சென்ற ஈ.பி.டி.பியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர் ராஸீக் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு நடத்தி மேற்படி கடற்பகுதியில் மீன்பிடிப்பதறகான அனுமதியைப் பெற்றுத் தருவதாக மீனவர்களிடம் உறுதி அளித்தார். இதனை அடுத்து வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச்சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் உண்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே பொருள் ஏற்றிவர விரைவில் புதிய கப்பல்

### அமைச்சர் டக்ளஸ் தகவல்

கொழும்பு,மே28

குடாநாட்டுக்குப் பொருள்களை எடுத்து வருவதற்கென யாழ்ப்பாணத்துக்கும் - கொழும்புக்கும் இடையில் புதிதாக கப்பல்சேவை ஒன்று ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

குடாநாட்டுக்கு விஜயம் செய்த தென்னிலங்கைப் பத்திரிகையாளர் குழு ஒன்று அமைச்சரை நேரில் சந்தித்து குடாநாட்டின் சூழ்நிலை குறித

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா செஞ்சிலுவைச் சங்கத் தலைவராக கிஷோர்

வவுனியா,மே28

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளைக்கு புதிய நிர்வாக சபை நேற்றுத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

சங்கத்தின் முன்னாள் செயலாளரான சிவநாதன் கிஷோர் மீண்டும் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். புதிய செயலாள

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தென்மராட்சிப் பிரதேசத்தை இரு நிர்வாக அலகுகளாக்குக!

## அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே28

தென்மராட்சிப் பிரதேசத்தை இரண்டு நிர்வாக அலகுகளாக - இரு பிரதேச செயலர் பிரிவுகளாக - மாற்றி உதவுவதுடன் குறித்த இரு பிரதேசங்களையும் தென்மராட்சி மேற்கு பிரதேச செயலகம், தென்மராட்சி கிழக்கு பிரதேச செயலகம் எனப் பெயரிட வேண்டும்.

- இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கோரியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தென்மராட்சிப் பிரதேசமானது நீண்டு, பரந்து, விசாலித்த நிலப்பரப்பாகும். அத்துடன் 60 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசசெயலர் பிரிவும் ஆகும்.

சாவகச்சேரி நகர சபை 11 கிராம அலுவலர் பிரிவுகளை மட்டுமே உள்ளடக்கியது. ஏனைய 49 கிராம அலுவலர் பிரிவுகளையும் சாவகச்சேரி பிரதேச சபையே கொண்டுள்ளது. இந்தச் சமநிலையற்ற தன்மை புரிந்துணர்வோடும் பரிவோடும் நோக்க வேண்டிய விடயமாகும்.

இரு உள்ளூராட்சிச் சபைகளைக் கொண்ட இந்தப் பரந்த பிரதேசம் அபிவிருத்தி தொடர்பாகப் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இவ்விரண்டு சபைகளுக்கும் ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு அபிவிருத்திப் பணிகளைச் செய்வதென்பது முயற்கொம்பாகவே உள்ளது. இப் பரந்து விரிந்த பிரதேசத்தை குறைந்த நிர்வாக மையங்களால் கட்டியெழுப்புவது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தின் பொருளாதாரத்தை முன்னெடுக்க முனைந்து நிற்கின்ற எம்மவருக்கு மண்ணை நேசிக்கும் தாங்கள் உறுதுணை புரிவீர்கள் என்று நம்புகிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சிக் கூட்டுறவு அமைச்சின் செயலாளர், யாழ்.அரசாங்க அதிபர் உட்படப் பலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.(ஐ-10)

# போதியளவு பெற்றோல் கையிருப்பில் உள்ளது

## கூட்டுத்தாபன அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே28

யாழ்.மாவட்டத்துக்குத் தேவையான பெற்றோல் கையிருப்பில் இருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்.மாவட்டத்துக்கு ஒரு மாதத்துக்கு ஒரு லட்சத்து 85 ஆயிரம் லீற்றர் பெற்றோல் தேவைப்படுகிறது.

கொழும்பிலிருந்து ஒரு மாதத்தில் இரண்டு தடவைகள் கப்பலில் 3 லட்சம் லீற்றர் பெற்றோல் எடுத்துவரப்படுகிறது. அண்மையில் கொழும்பிலிருந்து கப்பல் வரத்தாமதமானதாலேயே பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

தற்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்குத் தேவையான பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. போதியளவு பெற்றோல் காங்கேசன்துறையிலுள்ள கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலையிலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ-5)


## தவறிவிட்டது

நேற்று (27-05-2001) ஞாயிற்றுக்கிழமை மாலை பாக்குடன், சிறிதளவு பணம், சங்கிலி, காப்பு, மோதிரம் என்பன சிறுப்பிட்டி வீதித் தடைக்கும் நீர்வேலிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நல்லூர் சிவன் கோயில் பிரதம குருக்களிடம் ஒப்படைக்கவும்.

**சன்மானம் வழங்கப்படும்.** (88351)


## சிறுவர் அரங்கு

தென்மராட்சி,மே28

இவ்வருடத்திற்குரிய தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளுடன் ஆரம்பப்பிரிவு சிறார்களுக்கான 'சிறுவர் அரங்கு' என்னும் சிறுவர் நாடகமும் நடத்தப்படவுள்ளது.

மாகாண தமிழ்மொழித் தின விழாவின்போது அல்லது விழாவின் பின்பு தனியொருநாள் நிகழ்வாக வன்னி, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் சிறுவர் அரங்க விழாவை சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

சிறுவர் அரங்கில் கலந்து கொள்ளும் சிறார்களுக்கான வலயமட்டப் போட்டிகள் ஜூன் 17ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது. போட்டியில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பங்களை ஜூன் ஐந்தாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். (ஐ-117)


## 120ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வி சுபாஜினி யோகராஜா**

(உயிரியல் பிரவு மாணவி, பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை)

*அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

தகவல்:
நண்பர்கள்
யோகாஸ் கிறீம்ஹவுஸ்
உரிமையாளர் சக ஊழியர்கள்.

*கந்தமுருகேசனார் சிலையடி, மந்திகை.* (C/16898)



## புலமைப்பரிசில் - 2001 (41)

| அதிகூடிய புள்ளிகள் பெற்றோர் | |
|---|---|
| ஆ.ஜதிகானந்த் | - 192 |
| சு.டினேஸ்சாந்த் (யா/இ.ஆ.பா.) | - 188 |
| ஜ.திவ்யா (சின்மய பாரதி வித்.) | - 186 |
| ச. கோபிகாந்தன் (யா/இ.ஆ.பா.) | - 185 |
| உ.நிவேதிகா | - 184 |
| வ.அனுசன் (யா/இ.ஆ.பா.) | - 183 |
| ந.சதீஸ்வரன் (கோண்டாவில் இராமகிருஷ்ணா) | - 180 |
| பொ.முருகேந்திரா | - 180 |
| பு.தபோகரன் | - 180 |

BOND யாழ்நகர் (88345)



## கண்ணீர் அஞ்சலி

சிற்பச் சக்கரவர்த்தி, சிற்பகலாசிம்மன், கலாபூஷணம்

**ஆறுமுகம் ஜீவரட்ணம்** - ஆசாரியார்

(அதிபர் - ஆறுமுகம் சிற்பாலயம் - திருநெல்வேலி)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவருடைய குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- கவாஸ் தொலைத் தொடர்பு நிலையம்.
(KAVAS COMMUNICATION CENTRE)

*டிப்போச் சந்தி, பலாலி வீதி, கோண்டாவில்.* (C/16896)



## தேவை

தையல் நிலையம் ஒன்றுக்கு (அனுபவம் வாய்ந்த) பெண் பிள்ளைகள் தேவை. உடன் நேரில் வரவும்.

தொடர்பு:-
**நஞ்சித் தையலகம்**
63/4, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (88341)



## பாசமிகு ஆசிரிய தந்தைக்கு அஞ்சலி



இளைப்பாறிய ஆசிரியரான

**விக்ரர் யாழ்.ஜெயம்**

அவர்களின் ஆன்மா சாந்தியடைய எமது செபங்கள்.

- மாணவ குருக்கள். (88350)


## கல்விச்சாலைக் காட்சிகள்



மானிப்பாய் இந்துக் கல்லூரியில் புதிதாக நிறுவப்பட்ட செயற்பாட்டு அறை, விவசாய அலகு ஆகியவற்றின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். கல்லூரி அதிபர் கு.சண்முகநாதன், சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் ஆகியோரும் அருகில் காணப்படுகின்றனர். (க-135)



கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் கல்விக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் வடமராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் மங்கள விளக்கேற்றுவதையும், கரவெட்டிக் கல்விக் கோட்ட அதிகாரி க.அம்பலவாணர், உதவித் திட்டமிடல் அதிகாரி கே.அம்பிகைபாகன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (க-10)



மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா பாடசாலைக் கொடியை ஏற்றுவதையும் ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.கனகசபை, வித்தியாசாலையின் அதிபர் திருமதி ஆர்.சோதிலிங்கம் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (க-10)



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தைச் சேர்ந்த 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் கரபந்தாட்ட அணியினர் மாவட்ட மட்டப் போட்டியில் முதலிடம் பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விளையாட்டு அணியினருடன் அதிபர், ஆசிரியர்களையும் படத்தில் காணலாம். (க-10)

# மக்கள் வங்கி முகாமையாளரின் இடமாற்றம் சதி நடவடிக்கை என்கின்றனர் வணிகர்கள்

## அமைச்சரிடம் கையளித்த மகஜரில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

மக்கள் வங்கியின் யாழ். வடவலய உதவிப்பொதுமுகாமையாளர் க. திருநாவுக்கரசுவின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரி யாழ் நகரப்பகுதி வர்த்தகர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர். அந்த மகஜரில் முகாமையாளரின் இடமாற்றம் ஒரு சதி நடவடிக்கை என்றே கருதவேண்டியுள்ளது என்று வர்த்தகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த இடமாற்றம் குறித்து ஆட்சேபம் தெரிவித்து நேற்று முன்தினம் ஊர்வலமாகச் சென்ற யாழ். நகர வர்த்தகர்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச்சந்தித்துக் கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ் பிரதேசத்தில் உள்ள சலக வங்கிகளும், யாழ் பிரதேசத்தை வைப்புக்களைச் சேகரிக்கும் ஒரு பிரதேசமாகவே பாவித்ததை நீங்கள் அறிவீர்கள். சேகரிக்கப்பட்ட வைப்புக்கள் சிங்களப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்யப்பாவிக்கப்பட்டனவேயொழியத் தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கென என்றுமே பாவிக்கப்பட்டதில்லை.

மக்கள் வங்கியும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. 1964 முதல் 1996 ஆம் ஆண்டுக்குட்பட்ட 32 வருடங்களுக்கு மக்கள் வங்கி, யாழ் பிரதேச வைப்புக்களைச் சிங்களப்பிரதேச அபிவிருத்திக்கே தாரை வார்த்தது 1997 ஆம் ஆண்டிலே யாழ் பிரதேசத்தைப் பொறுப்பேற்ற திருநாவுக்கரசு இக்கொள்கையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒருவராகக் காணப்பட்டார்,

ஒரு வர்த்தக வங்கி உண்மையான இலாபத்தில் இயங்க வேண்டுமெனின் 40% வைப்புக்களாவது கடன்களாக அப்பகுதியில் வழங்கப்பட வேண்டும் என்னும் கொள்கையுடன் கடன் வழங்கல், மேலதிகப்பற்று வழங்கல், உத்தரவாதக் கடிதக் கடன்களை வழங்கல் என்பனவற்றைத் தம் ஊழியரிடையே ஊக்குவித்ததன் மூலம் யாழ் மக்களுக்கு பெரும்பணியாற்றினார். 1996 ஆம் ஆண்டின் முன் ரூபா 5,000/- கூட கடனாகவோமேலதிகப்பற்றாகவோ வழங்க மறுத்த மக்கள் வங்கியை வருடமொன்றுக்கு 1,000 மில்லியனுக்குக் குறையாமல், யாழ் மாவட்டத்தில் மேலதிகப்பற்றாக வழங்க வைத்தபெருமை இவரைச் சார்ந்ததே.

களநிலையைக் கருத்திற் கொண்டு மற்றைய வங்கிகள் அனைத்தும் தம் கதவுகளை வைப்புக்களை மட்டும் ஏற்கத் திறந்து வைத்து யாழ். மக்களை ஏமாற்றிய காலத்திலே திருநாவுக்கரசு அவர்கள் வர்த்தக சமுதாயத்திற்குச் செய்த உதவிகளினால் தான் நாம் பொருள்களைக் கொழும்பிலிருந்து வரவைத்து நியாயமான விலையில் யாழ். மக்களுக்கு வழங்கி கள்ளச் சந்தையை ஒழிக்க முடிந்தது; மக்களைப் பட்டினியிலிருந்து காக்க முடிந்தது. யாழ். மக்களினது பல கோடி ரூபா பெறுமதியான பொருள்களுடன் ''அஸ்ரோரியா'', ''பிறின்ஸஸ் காஷ்'', ''உகண'' கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்ட வேளையில் மக்கள் வங்கி ஒன்றுதான் நேசக்கரம் நீட்டி எங்களை வரவழைத்ததையும் முகாமையாளர் திருநாவுக்கரசு எங்களது இழப்புக்களைத் தன்னால் இயன்றளவு ஈடுசெய்தமையும் எங்களால் மறக்க முடியாத ஒன்று. அன்று ''எரியும் வீட்டில் பிடுங்கியது இலாபம்'' என எங்களை நிர்ப்பந்தித்து இரக்கமில்லாமல் தம் வங்கிக் கடன்களை வசூலித்திருந்தால் இன்று எம்மில் அநேகர் வர்த்தகத்தில் இருந்திருக்க முடியாது.

வர்த்தகர்களைவிட, அவரின் கடனுதவியால் சொந்தமாக வீடுகளை வாங்கியவர்கள், அழிந்த வீடுகளைப் புதுப்பித்தவர்கள், சுயதொழில்களை ஆரம்பித்தவர்கள் ஆயிரம் ஆயிரம் பேராகும். இந்நிலையில் வழமைக்கு மாறான அவரின் திடீர் இடமாற்றம் எம்மைக் கலக்கத்தில் ஆழ்த்தியதிலோ அல்லது அத்திடீர் இடமாற்றத்தில் சந்தேகத்தை உருவாக்கியதிலோ ஆச்சரியமொன்றுமில்லை. கொடிய யுத்தமொன்றின் பின் யாழ். பிரதேசத்தைப் புனரமைக்கத் தாங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு முட்டுக் கட்டை போடவென திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சதிகளில் இதுவும் ஒன்றா எனக் கூட நாங்கள் அச்சப்படுகிறோம்.

இவரது திடீர் மாற்றத்தால் பின்வரும் விளைவுகள் ஏற்படலாம் என அஞ்சுகின்றோம்.

யாழ். பிரதேசத்தி வங்கி உதவியின்றி வியாபாரம் செய்யக்கூடிய பெரிய வணிகர்கள் மட்டுமே வர்த்தகத்தில் இனி ஈடுபட முடியும்,

இதனால் போட்டி வியாபாரம் தவிர்க்கப்பட்டு கள்ளச் சந்தை உச்ச நிலையை அடையும்,

சிறிய வர்த்தகர்களும் அவரது ஊழியர்களும் தொழில் வாய்ப்பை இழப்பார்கள்.

பொருள்களின் விலையேற்றத்தினால் மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும்.

இவைகளை விட ஆதனத்தில் மேலான கடன்கள் இன்று மக்கள் வங்கியால் மட்டுமே வழங்கப்படுகின்றன. மற்றைய வங்கிகளைப் பொறுத்த வரை யாழ். பிரதேசத்தில் உள்ள எந்த ஆதனங்களும் பெறுமதியற்றதாகவே கருதப்படுகின்றது, இந்நிலையில் புனர்வாழ்வுக் கடன்களை எடுப்பதற்கு ஆதனங்களைப் பிணையாக வைக்க மக்கள் அலைய வேண்டிய சூழ்நிலை ஏற்படும்

திருநாவுக்கரசு அவர்களின் இடமாற்றத்தை நாங்கள் உண்மையில் ஓர் இடமாற்றமாகக் கருதவில்லை. யாழ். மக்களின் வளர்ச்சிக்கும் புனர்வாழ்வுக்கும் எதிராகச் செய்யப்பட்ட ஒரு சதியாகவே கருதுகின்றோம் எனவே இவ்விடயத்தில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு இவ்விடமாற்றத்தை ரத்துச் செய்வதுடன் இச் சதிக்குப் பின்னால் ஒளிந்திருக்கும்சதிகாரர்களை அம்பலப்படுத்த வேண்டும் என்றும் மிகத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றோம். ஏனெனில் இவ்விடமாற்றம் வர்த்தகராகிய எமக்கு எதிராகச் செய்யப்பட்ட சதிஎனபதிலும் பார்க்க, தாங்கள் யாழ். பிரதேசத்தைப் புனரமைக்க எடுக்கும்ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைத் தடம்புரளச் செய்யப்பட்ட சதி என்றே நாம் கருதுகின்றோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-4-5)

# மக்களின் பங்களிப்புடன் கூடிய கூட்டுமுயற்சியே வெற்றி தரும்

## கட்டடத் திறப்புவிழாவில் ஜி.ரி. இசற். பிரதிநிதி

சண்டிலிப்பாய், மே 28

கூட்டு முயற்சி மூலம் அபிவிருத்தித்திட்டங்களையும்புனரமைப்புத் திட்டங்களையும் அவ்வப் பகுதி மக்களின் பங்களிப்புடன்நிறைவேற்றினால் அத்தகைய திட்டங்கள்.வெற்றியடைய வாய்ப்பு ஏற்படுகின்றது. கிராமங்களில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட கூட்டு முயற்சி நல்ல பயனைத் தந்துள்ளது. இக்கூட்டு முயற்சியின் போது ஏற்படும் தற்காலிக தடங்கல்களைக்கண்டு மனம் தளராது செயற்பட வேண்டும்.

ஜெர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் (ஜி.ரி. இசற்) உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஜி.ரி. இசற் யாழ். புனரமைப்புத் திட்டத் தலைவர் ஈவகாட் கல்பா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் சி. மகேந்திரன் தலைமையில் கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற விழாவில் புதிய கட்டடத்தை ஈவகாட் கல்பா சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

எமது ஜெர்மன் நாட்டிலும் முன்னர் ஏற்பட்ட யுத்தங்களினால் பல பாதிப்புகள் ஏற்பட்டன. கூட்டு முயற்சி (Team Work) மூலம் அங்கு புனரமைப்பு மற்றும்அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டதால் துரித அபிவிருத்தியைப் பெற்று இன்றைய நிலையை அடைய முடிந்தது.

கடந்த 1997 ஆம் ஆண்டிலிருந்து யாழ். மாவட்டத்தில் எமது திட்டப் பணிகளை ஆரம்பித்தோம். பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குடிதண்ணீர் விநியோகத் திட்டம், வீடமைப்புத் திட்டம், பாடசாலை புனரமைப்புத் திட்டம், மலசல கூடங்கள் நிறுவும் திட்டம் ஆகிய பலவேறு வகைப்பட்ட திட்டங்களை பல மில்லியன் ரூபா செலவில் இங்கு மேற்கொண்டோம். தொடர்ந்து நாம் இங்கு நிலை கொண்டிருக்கும் காலம் வரை எமது நிறுவனத்தின் மூலம் பின்தங்கிய பிரதேசங்களில் எம்மாலான உதவிகளைச் செய்து வருவதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம். தங்கள் அத்தியாசிய முக்கிய தேவைகள் குறித்து எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிவித்தால் நாம் அதுபற்றி ஆராய்ந்து உதவி செய்ய முடியும். மக்கள் பங்களிப்புடன் நிறைவேற்றப்பட்ட இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டிருக்கும்இக்கட்டடத்தைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றேன்—என்றார்.

### மக்கள் பங்களிப்பு குறைவு

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் (வலி – தென்மேற்கு) பிரதேச செயலர் நா. வேதநாயகன் தமது உரையில்கூறியதாவது:-

வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்கள் எமது பிரதேசத்தில் தாம் மேற்கொள்ளும் திட்டங்களை மக்களின் பங்களிப்புடன் நிறைவேற்றுவதற்கே விரும்புகின்றன. மக்களின் ஒத்துழைப்பும், பங்களிப்பும் இருக்கும் பட்சத்தில் தான் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ள முடியும். ஆனால் எமது பிரதேசத்தில் மக்கள் வழங்கும் பங்களிப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. இங்கு நிறுவப்பட்ட இச்சங்கக் கட்டடத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். இங்கு பல்வேறு பணிகளை மேற்கொண்டுஇக்கிராம மக்களின் அபிவிருத்திக்கு இச்சங்கம் உதவ வேண்டும். இத்திட்டத்தை இங்கு நிறைவேற்ற முன்வந்த ஜி. ரி. இசற் நிறுவனத்திற்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன் — என்றார்.

### மக்கள் நலன் கருதியே செயற்றிட்டங்கள்

சண்டிலிப்பாய் பிரதேசச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மு. பாலசிங்கம் உரையாற்றுகையில்—

ஜி. ரி. இசற் நிறுவனம் எமது சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சகாயபுரம், சாந்தை, பிரான்பற்று மாவியபிட்டி ஆகிய இடங்களில் பொதுக்கட்டடங்களை நிறுவியுள்ளது. பல வீடமைப்பு திட்டங்களையும்நிறைவேற்றியுள்ளது. மக்களின் நன்மை கருதியே இத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதால் மக்கள் அனைவரும் இதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டியது அவசியம்- என்றார்.

ஜி. ரி. இசற் நிறுவன பிரதம இணைப்பாளர் எஸ். இராசசிங்கம், கிராம அலுவலர் பொ. இராசேந்திரம், சங்கப்பொருளாளர் ச. இரத்தினசிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். வரவேற்புரையை சங்க உபதலைவர் கு. வரதராசாவும், ஆசியுரையை பிரம்மஸ்ரீ இ. உலகேஸ்வரக் குருக்களும் நிகழ்த்தினர்.

(ஐ-135)


யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை

## அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில்

## கேள்வி கோரல்

மேற்படி ஆலயத்தின் பரிவாரத்தெய்வங்களுக்கான ஆலயம் 7' — 1'' கால்பிரவாய் -அளவில் (7அடி - 1 அங்குலம், 4 ஆலவங்கள்) சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய ஆலயம் ஒன்று அமைப்பதற்கு சிலைகள், வர்ணம் தீட்டல் தவிர்ந்த கூலி மட்டும். ஆலய அமைப்புப் படத்துடன் ஸ்தபதிகளிடம் இருந்து கேள்வி கோரப்படுகின்றது.

இக் கேள்வியானது எதிர்வரும் (07 – 06 - 2001) வியாழன் மாலை 4-00 மணிக்கு முன்னர் கீழ்க் காணும் விலாசத்துக்கு 9''X4'' கடித உறையில் அரக்கு முத்திரை இட்டு இடதுபக்க மேல் மூலையில் ''பரிவாரத் தெய்வங்களுக்கான ஆலய அமைப்புக் கேள்வி'' என எழுதப்பட்டு பதிவுத்தபாலில் அல்லது ஆலயக் காரியாலயத்தில் கிடைக்கக்கூடியதாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

''தலைவர்
புனருத்தாரணக் குழு''
யாழ். வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம்,
140, பருத்தித்துறை வீதி,
நல்லூரர், யாழ்ப்பாணம்.

இக் கேள்வியானது எதிர்வரும் (09 - 06 - 2001) சனி மாலை 3-00 மணிக்கு (புதிய நேரம்) இக் குழுவினால் திறக்கப்படும். அப்போது தவறாமல் கேள்வி கோருவோர் சபையில் சமுகமளிக்கவும்.

— புனருத்தாரணக் குழு

(88540)


காணாமற்போன ஐவர் தொடர்பாக

# யாழ். மேல் நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு மனுத்தாக்கல்

யாழ்ப்பாணம், மே 28

கடந்த 96 ஆம், 97 ஆம், ஆண்டு காலப்பகுதிகளில் காணாமற்போனதாகக் கூறப்படும் ஐந்து பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மனித கௌரவத்திற்கான மன்றத்தின் சட்டத்தரணி ஆர். ஜெயசிங்கம் தாக்கல் செய்துள்ள இந்த மனுக்கள் விரைவில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கீழ் வரும் ஐவர் தொடர்பான வழக்குகளே தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

முருகன் ஜெயரட்ணம் (மறவன்புலோ), முருகன் சிவராசா (மறவன்புலோ), கணேஸ் ரமேஸ் (மானிப்பாய்), கறுப்பன் பாலகிருஷ்ணன் (யாழ்), கறுப்பன் சுரேஷ் (யாழ்.),

மேற்குறிப்பிட்ட காலப் பகுதிகளில் காணாமற்போனதாகக் கூறப்படும் அனைவர் தொடர்பாகவும், மனித கௌரவத்திற்கான மன்றத்தினால் ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன. என்றும் —

சம்பந்தப்பட்டவர்கள் யாழ். (மணியம் கட்டடத்தில் (சிறாம்பியடியில்) இயங்கும் மேற்படி மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

மக்களின் நன்மை கருதி இந்த வழக்குகள் இலவசமாக நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க-10)

## மின்சாரம், தொலைபேசிச் செலவுக்கு வரையறை:

# பாடசாலைகளின் வீண் விரயங்களை தவிர்க்குமாறு அறிவுறுத்தல்

### மேலதிக செலவுக்கு அதிபரே பொறுப்பு

யாழ்ப்பாணம், மே 28

பாடசாலைகளினது அதிகரித்துவரும் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் வீண்விரயங்களைத் தவிர்க்கவும், சிக்கனமான முறைகளைப் பேணவும் கூடுதலான கவனம் செலுத்த வேண்டுமெனவும், இதன் பொருட்டு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மாகாணக் கல்விப்பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தொலைபேசிப் பாவனை, மின்சாரப்பாவனை, பராமரிப்புச் சேவைகள், காகிதாதிகள் உபயோகம், ஏனைய பிற செலவினங்கள் போன்றவற்றில் வீண்விரயங்களைத் தடுத்து சிக்கனத்தைக் கைக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இந்நடவடிக்கைகள் தொடர்பாக தொலை பேசி பயன்படுத்துதல், மின்சாரப் பாவனை என்பவற்றின் மீது உச்ச எல்லையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மின்சாரப் பாவனை தொடர்பாக 1 ஏ, பி, 1சி தர பாடசாலைகளின் மாதாந்த உச்ச செலவு 500 ரூபாவாகவும், தரம் 11 பாடசாலைகளின் உச்ச செலவு 400 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தொலை பேசிப் பாவனை தொடர்பாக 1ஏ பி பாடசாலைகள்— வரிகள் உட்பட வரும் மாதாந்த தொலைபேசிக் கட்டணத்தில் அரைவாசித் தொகை அல்லது ஆகக் கூடுதலாக ஆயிரம் ரூபா இரண்டில் எத்தொகை குறைவோ அது.

1 சி பாடசாலைகள்—மேற்கூறிய நிபந்தனைகள் படி ஆகக் கூடிய தொகை 750 ரூபா வரிகள் உட்பட வரும் கட்டணத்தின் அரைவாசி எத்தொகை குறைவோ அது.

தரம் 11 பாடசாலைகள்—மேற் கூறிய நிபந்தனைகளின் படி 500 ரூபா அல்லது வரிகள் உட்பட வரும் கட்டணத்தில் அரைவாசி எது குறைவோ அது.

தொலை பேசி, மின்சாரக் கட்டணங்கள் எல்லைகளை மிஞ்சும் இடத்து அவை அதிபராலேயே செலுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-152)


அராலி

ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

மகோற்சவ விஞ்ஞாபனம்

மேற்படி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் வைகாசி மாதம் 18 ஆம் திகதி (01-06-2001) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வைகாசி மாதம் 26 ஆம் திகதி (09-06-2001) சனிக்கிழமை நடைபெறும் பொங்கலுடன் நிறைவடைகிறது.

குறிப்பு:- கடைகள் அமைத்தல்

மகோற்சவக் காலங்களில் தற்காலிகக் கடைகள் அமைக்க விரும்புவோர் 30-05-2001 புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆலய முன் வீதியில் சமுகம் தந்து அன்றைய தினமே உற்சவ காலங்களுக்கான முழு வாடகைப் பணத்தையும் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுத் தங்களுக்கு உரிய இடங்களை உறுதிப்படுத்தவும்.

(சி/16830) பரிபாலன சபை.



நீங்காத நினைவில் 7 ஆம் ஆண்டு



அமரர் நடராசா கனகேஸ்வரன்

[இளைப்பாறிய அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை]

தோற்றம் 18-12-1929 மறைவு 28-05-1994

- மனைவி.

மல்லாகம். (88151)


### தமிழரசுக்கட்சி மூத்த பிரமுகர் காலமானார்

யாழ்ப்பாணம், மே 28

தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரான முத்தையா இராமநாதன் (வயது 90) திருகோணமலையில் கடந்த செவ்வாயன்று காலமானார்.

இவர் தமிழரசுத் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் தோளோடு தோள் நின்று திருகோணமலையில் தமிழரசுக் கட்சியை ஸ்தாபிப்பதில் முன்னின்று உழைத்தவராவார். (க-7)

### தீவுப்பகுதிக்கு பத்திரிகையாளர் குழு விஜயம்

காரைநகர், மே 28

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பத்திரிகையாளர் குழு ஒன்று, கடந்த வியாழக்கிழமைமாலை காரைநகருக்கு விஜயம்செய்து அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டது. பொதுமக்களுடனும் கலந்துரையாடியது.

'இந்து' பத்திரிகை, உட்பட பல உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகை நிறுவனங்களைச் சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் வருகைதந்திருந்தனர்.

காரைநகர்ப் பகுதி உள்ள அரச அதிகாரிகள், பிரஜைகள் குழுத்தலைவர், கடற்படை அதிகாரிகள் மற்றும் பொது மக்களுடன் உரையாடி அங்குள்ள நிலைமைகளை அவர்கள் விவரமாகக் கேட்டறிந்து கொண்டனர்

### சாரணர் கூட்டம்

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் சாரணர் தலைவர்களுக்கான விசேட கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு சங்கானை சிப்பிரகாசம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் வருடாந்த பாசறை விழா நிகழ்வு, நூல் வெளியீட்டு விழா என்பன பற்றிக் கலந்துரையாட இருப்பதால் அனைத்து சாரணத் தலைவர்களும் — சாரணர், குருளைச் சாரணர் — தவறாது வருகை தருமாறு மாவட்ட சாரணர் ஆணையாளர் ந. சௌந்தரராசா அறிவித்துள்ளார். (க-152)

### பாம்பு தீண்டியது

படுக்கையில் இருந்த வரை விரியன் பாம்பு தீண்டியது. துன்னாலை கிழக்கில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த இராசையா பாலசிங்கம் (வயது 60) என்பவரே பாம்புக் கடிக்கு இலக்கானவர் ஆவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (க-15)


யாழ். கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானம் நிர்வாக சபைக் கூட்ட அறிவித்தல்

காலம்:- 02.06.2001 சனிக்கிழமை மாலை 4.30 மணி (S.L.T.)

நிர்வாக சபை உறுப்பினர்கள் கூட்டத்துக்குத் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

ம. ஞானசேகரம் தலைவர்

K. செந்தில்குமரன்
இரா. செல்வவடிவேல், இணைச் செயலாளர்கள்.

இராமையாச் செட்டியார்,
முத்துலிங்கம் செட்டியார்.
பொருளாளர். (88283)



பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

விசேட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் அனைத்துக்கிளைகளுக்குமான கிளைக்குழுவினரைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன. இது தொடர்பாக உறுப்பினர்கள் இடாப்பு மூடப்பட்டு கிளைவாரியாகத் தயாரிக்கப்பட்ட முழுத்தகைமை பெற்ற உறுப்பினர் அட்டவணைகள் எமது சங்கம் தற்போது இயங்கி வரும் புலோலி கிழக்கு, புலோலி எனனும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணைகள் தொடர்பாக மேன் முறையீடுகள், ஆட்சேபனைகள் எதுவும் இருப்பின் உறுப்பினர்கள் அவற்றை இன்றிலிருந்து (07) ஏழு நாள்களுக்குள் சங்கத் தலைமை அலுவலகத்திற்கு எழுத்து மூலம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவுச் சட்டத்தின்படி முழுத்தகைமை பெற்ற உறுப்பினர்கள் மட்டுமே கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து வாக்களிக்கும் உரிமையைப் பெற்றவர்களாவர்.

முழுத்தகைமை பெற்ற உறுப்பினர்கள் என்பது உறுப்பினராகச் சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தைக் கடந்தவரும் ஒருபங்கின் முழுப்பெறுமதியான ரூபா 100 செலுத்தி முடித்தவருமான ஓர் உறுப்பினரைக் குறிக்கும்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதி, இடம், மற்றும் நிகழ்ச்சி நிரல் என்பன தொடர்பான அறிவித்தல் பத்திரிகை வாயிலாக பின்னர் அறிவிக்கப்படும்.

செயலாளர்
(88337) ப. தெ. வ. அ. கூ. சங்கம், பளை.



இரண்டாம் ஆண்டு நினைவுப் பூக்கள்



வல்லிபுரம் முருகையா

[இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்]

மலர்வு 04-09-1947 உதிர்வு 05-06-1999

திதி:- அபரபக்க சஷ்டி [28-05-2001]

கலகலத்த முறுவலைப் பெற்றனை
கனிவுமிக்க மொழிகளைப் பேசினை
உலகினோடு கலந்து குலாவினை
ஓங்கி நிற்கும் மலையென நின்றனை
நிலை கலங்கிடக் காலனோடு அன்றோர் நாள்
நெடியபாதை நடந்தனை! ஐயனே
தொலைந்திடாது உம் நினைவு உம் வழியிலே
தொடரும் எங்கள் பயணம் எம் தெய்வமே!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

மனைவி, பிள்ளைகள்.

"ஆனந்த வாசம்"
மஞ்சத்தடி தெற்கு,
இணுவில். [88306]

உதயன்

## தயாராவது எதற்கு?

இனப்பிரச்சினையைச் சமாதான வழியில் தீர்ப்பதற்கான முயற்சி சம்பந்தமான வரைபு (Graph) மீண்டும் ஒருமுறை கீழ்நோக்கி வீழ்ந்துள்ளது. வெளிப்படையாக ஏழு மாதங்களுக்கு முன்னரும், உத்தியோக பூர்வமற்ற முறையில் சுமார் ஒரு வருட காலமாகவும் நடைபெற்று வருகிறது சமாதான முயற்சி. அதன் வரைபு அடிக்கடி ஏறுவதும் இறங்குவதாகவும் உள்ளது. வரைபுப் புள்ளி இறங்குமுகமாகி வந்ததே அனேக தடவைகள்!

பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்க முடியாது என்று அரசு திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டது.

தங்கள் அமைப்பு மீதான தடையை நீக்கினால் மட்டுமே பேச்சுவார்த்தைக்கு வரமுடியும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகப் பிந்தி விடுத்த கோரிக்கையை அரசாங்கம் அனேகமாக ஏற்றுக் கொள்ளும் என்றே அரசியல் வட்டாரங்கள் ஊகம் தெரிவித்தன; எதிர்பார்த்திருந்தன என்றும் சொல்லலாம்.

ஆனால், பேச்சுவார்த்தைக்கு முன்னர் தம்மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு விடுதலைப் புலிகள் கேட்பது நியாயமற்றது என்று அரசாங்கம் தர்க்கம் புரிகிறது; அது வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் துலக்கமாகக் கூறியுள்ளது.

எந்தத் தரப்பும் - எவரும் - தமது நிலைப்பாடு அல்லது முடிவு சரிதான் என்று காட்டுவதற்கு காரணங்களைக் கண்டுபிடித்து வாதம் செய்வது வழமை. அதேமுறையில் அரசு தனது நிலைப்பாட்டைச் சரிப்படுத்தி அறிக்கை வெளியிட்டதைப் பாரதூரமாகக் கொள்வதற்கில்லை. ஒரு வகையில் அது வழமைதான்.

ஆனால் தனது முடிவின் உள்நோக்கம் என்ன என்பதனை தன்னை அறியாமலே அது வெளிப்படுத்தியிருப்பது தான் ஆச்சரியத்துக்குரியது!

பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்னர் தடையை நீக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கை நியாயமானது அல்ல. சமாதான நடைமுறைகள் ஆரம்பமாவதை முடிந்தால் தடுக்கும் அல்லது தாமதப்படுத்தும் நோக்குடன் இந்தக் கோரிக்கை அமைந்துள்ளது - என்று அரசின் சார்பில் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஆறு பக்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் முக்கியமான பகுதி இதுவெனக் கொள்ளலாம்.

அதாவது, சமாதான முயற்சி தோல்வியுற்றால் (தோல்வியுறச் செய்துவிட்டு), முழுப்பழியையும் விடுதலைப் புலிகள் மீது சுமத்துவதற்கான "அத்திவாரத்தை" அரசு தனது அறிக்கையில் போட்டிருக்கிறது. அறிக்கையைக் கூர்ந்து படித்தால் அரசு தனது உள்நோக்கத்தை வெளிப்படுத்தியிருப்பதை அவதானிக்கலாம்.

விடுதலைப் புலிகள் மீதான தடை நடைமுறையில் இருப்பதால் அவர்கள் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவதை எந்த வகையிலும் தடுக்காது என்று அரசு கூறுகிறது. ஆனால் தடையை நீக்குவதால் உண்டாகக் கூடிய பின்னடைவு அல்லது ஆபத்து எவை என்பதனை விளக்கவில்லை!

இரு தரப்பினரும் பல மாத காலமாகக் கடுமையாக உழைத்த பின்னர் உருவாக்கப்பட்ட ஆவணத்தின் உள்ளடக்கத்திற்கு அரசாங்கம் தனது அங்கீகாரத்தை வழங்க ஏப்ரல் மாதத்திலேயே தயாராக இருந்தது என்று அரசாங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதும் -

அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதில் மிகவும் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் இருந்தது; செயற்பட்டது. ஆனால் விடுதலைப் புலிகளே புதிய புதிய கோரிக்கைகளை - நிபந்தனைகளை - முன் வைத்து அரிய சந்தர்ப்பத்தைப் பாழடித்துவிட்டது - என்று பழி சுமத்துவதற்கே என்பது நன்கு புலனாகின்றது.

சமாதான முயற்சியை விட்டு விலகுவதற்கும், அது கைகூடாமற் போனமைக்குப் புலிகளே காரணஸ்தர்கள் என்று காட்டுவதற்கும் அரசு தயாராகிறதோ என்ற சந்தேகம் எழுகின்றது!

# போக்குவரத்துச் சபைக்கு 10 புதிய பஸ்கள் வந்தன

## அமைச்சர் வைபவரீதியாகக் கையளிப்பு

யாழ்ப்பாணம்,மே28

கொழும்பிலிருந்து அண்மையில் கப்பலில் எடுத்துவரப்பட்ட 10 புதிய பஸ்களை வட பிராந்திய போக்குவரத்துச் சபையிடம் கையளிக்கும் வைபவம் நேற்று முன்தினம் வடக்கின் அபிவிருததி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சில் இடம்பெற்றது.

10 பஸ்களையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வைபவரீதியாகக் கையளித்தார்.

இந்த வைபவத்தில் யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, சுவாமி சித்ரூபானந்தா, வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் எஸ்.மணிவாசகன் மற்றும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.தவராசா, கா.வே.குகேந்திரன், பிரதேச சபைத் தலைவர்கள், வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் மற்றும் பொது மக்களும் கலந்துகொண்டனர்.

(க-10)

## நாட்டு நடப்பு

கலியாண மண்டபத்திலோ கதலி வாழை
கச்சேரி கேட்கவோ கனத்த பெரும் கூட்டம்
வலிய பெண் கேட்டு வந்தவராம் வரதர்
வாசிங்டனில் இவர் வகிப்பதோ பெரும் பதவி
வதனாவுக்கோ வயது பதினெட்டாகவில்லை
வழுக்கையருக்கோ வயதைம்பத்தாறு
சீதனக் கொடுமையால் சீரழிகின்றார் பெண்கள்
சீர்பெறவே நீவீர் தாருங்கள் திட்டம்!

*- விகடகவி மு.திரு.*



## தென்மராட்சி மாணவருக்கு சீருடை அன்பளிப்பு

தென்மராட்சி,மே28

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெற்றோரை இழந்துள்ள 75 மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தினர் சீருடைகளையும், கற்றல் உபகரணங்களையும் வழங்கியுள்ளனர்.

அண்மையில் நெல்லியடியில் உள்ள தென்மராட்சிப் பிரதேச செயலக உப அலுவலகத்தில் நடைபெற்ற எளிமையான நிகழ்வில் பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்பாளர் வி.சொக்கநாதன், சமுர்த்தி முகாமையாளர்களான மு.திவ்வியபாலன், சி.யோகராஜா ஆகியோர் இவற்றினை மாணவர்களுக்கு வழங்கினர்.

வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள மாணவர்களுக்கு விரைவில் சீருடைகளும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்படும் என்றும் அங்கு அறிவிக்கப்பட்டது.

(க-117)

# குருநகர்ப் பகுதி அபிவிருத்திக்கு 23 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே28

குருநகரிலுள்ள புனித யாகப்பர் தேவாலயம் உட்பட அப்பகுதியில் உள்ள நான்கு தேவாலயங்களைப் புனரமைப்பதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 13 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார் என்றும் மேலும் குருநகரில் உள்ள சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கும் அமைச்சர் 10 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார் என்றும் ஈ.பி.டி.பி.யின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஈ.பி.டி.பியின் யாழ்மாவட்டத் தலைமைச் செயலகத்தில் குருநகர் பகுதியிலுள்ள பல்வேறுபட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து, குருநகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி பேச்சு நடத்தியிருந்தனர்.

இச்சந்திப்பில் குருநகர் புனித யாகப்பர் தேவாலய புனரமைப்புக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 10 லட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார். மேலும் குருநகரிலுள்ள புதுமை மாதா ஆலயத்துக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும் புனித கார்மேல் மாதா ஆலயத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும் புனித ஆரோக்கிய நாதர் ஆலயத்துக்கு 75 ஆயிரம் ரூபாவும் புனரமைப்பு வேலைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இச்சந்திப்பில் பொது அமைப்புக்கள் மற்றும் மக்களின் சார்பில் 37 பேர் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.தவராசா, கா.வே.குகேந்திரன், ஈ.பி.டி.பியின் யாழ். பிரதேச அமைப்பாளர் றீகன் மற்றும் ஈ.பி.டி.பி. பிரமுகர் கேதீஸ், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம்பிள்ளை, யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மகாலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

குருநகரில் உள்ள சென்ஜேம்ஸ் பாடசாலை ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக இயங்க வேண்டுமென குருநகர் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கைக்கு அமைச்சர், கல்வி அதிகாரிகளுடன் உடனடியாகப் பேச்சு நடத்தி தனித்தனியாக இயங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை சென்ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் நிலவும் இடநெருக்கடியினை நிவர்த்தி செய்யும் முகமாக 10லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்றை அமைக்கவும் அமைச்சர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

மேலும், சென்.ஜேம்ஸ் ஆண்கள் மற்றும் பெண்கள் பாடசாலைகளுக்கு குடிநீர் வழங்க இரு தொட்டிகளைப் புதிதாகக் கட்டுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்.ஜேம்ஸ் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை மேலும் விரிவாக்க வனவள மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சருடன் டக்ளஸ் தேவானந்தா பேச்சு நடத்தி மரக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணியையும் பெற்றுக் கொடுத்துள்ளார். பாடசாலையில் நிலவும் ஆய்வுகூட வசதியின்மைக்கு விரைவில் தீர்வு காண்பதாக அமைச்சர் குருநகர் மக்கள் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்தார்.

கடலுணவுகளைப் பதனிடுவதற்கும் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்வதற்கும் வசதியாக ஐஸ் தொழிற்சாலை மற்றும் குளிர் அறை ஆகியவற்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கும்படியும் அமைச்சரிடம் குருநகர் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்கு தனது அமைச்சின் கீழ் இயங்கும் வடகடல் நிறுவனம் மூலமாக உரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன் கடலுணவுகளைத் தென்னிலங்கைக்கு கப்பல் மூலமாகவோ அல்லது விமானம் மூலமாகவோ எடுத்துச் செல்லவும் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி அளித்துள்ளார்.

- இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## அம்பாறையின் தமிழ்ப் பகுதிகளில் சுவரொட்டிகள்

அம்பாறை,மே28

'திகாமடுல்ல மக்கள் இயக்கம்' என்ற பெயரில் இனந்தெரியாத குழுவொன்று அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசங்களில் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

அச்சுவரொட்டியில் "அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் ஆதரவுடன் திகாமடுல்லவை பிரிப்பதற்கான சூழ்ச்சியை முறியடிக்க ஒன்றிணைவோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்முனைக் கரையோர மாவட்டம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

(க)

## வன்னிப் பகுதியில் இருந்து

# வவுனியா வரக் காத்திருக்கும் 2000க்கும் அதிகமான மக்கள்

வவுனியா,மே28

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து வவுனியா வருவதற்கு பலத்த கஷ்டங்களின் மத்தியில் 2000க்கும் மேற்பட்ட மக்கள் கடந்த சில தினங்களாகக் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னியிலிருந்து வவுனியாவுக்கும் வவுனியாவிலிருந்து வன்னிக்கும் வாரத்தில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலேயே 700 பேர் வீதம் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த எண்ணிக்கையிலும் அதிகமானோர் திருப்பி அனுப்பப்பட்ட நிலையிலும் வவுனியாவுக்கும் நாட்டின் வேறு பகுதிகளுக்கும் பல்வேறு தேவைகள் நிமித்தம் செல்வதற்காகவும் 2000க்கும் மேற்பட்டோர் பிரமணாளங்குளம் ஊடாக வவுனியா வருவதற்காக பண்டிவிரிச்சான் பகுதியில் காத்திருக்கின்றனர்.

இப்பகுதியில் அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத நிலையில் இவர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கிய வண்ணம் காத்திருக்கின்றனர்.

இதுபற்றி தங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் படையினரின் அனுமதி கிடைத்ததும் சனிக்கிழமைகளிலும் பொதுமக்கள் வவுனியா வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலம் தவம் கிடந்தே வவுனியாவுக்குள் வரவேண்டிய நிலை நீடித்து வருவது குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(க)

# பனை உற்பத்திகளை ஊக்குவிக்க அவசர நடவடிக்கைகள்

குடாநாட்டிலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பனை வெல்ல உற்பத்தி, கல்லாக்கார உற்பத்தி மற்றும் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை என்பவற்றை ஊக்குவித்து உற்பத்திகளை அதிகரிக்கச் செய்ய அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைக்கென பனை அபிவிருத்திச் சபையால் 27 லட்சத்து 32 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மு.பாக்கியநாதன் தெரிவித்தார்.

பனை வெல்லம் மற்றும் கல்லாக்கார உற்பத்திகளில் ஈடுபட்டுவரும் தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் என்பவற்றுக்கு தலா 2 லட்சம் ரூபாவும்-

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்துக்கு 6 லட்சத்து 82 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையை இயக்கிவரும் கட்டைவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம், தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணி, பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றுக்கும் தலா 3 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (க-4)

## நாளை

வைகாசி 15
செவ்வாய்க்கிழமை
திதி: ஸப்தமி
மாலை 7.09 வரை
நட்சத்திரம்: மகம்
பின் இரவு 3.29 வரை
சுபநேரம் : 10.22 - 11.52
ராகுகாலம் : 2.52 - 4.22
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

அறியாதாரிடம் அனுதாபம் கொள்வது, தலைசிறந்த பண்பாட்டுக்கு அறிகுறி.


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



வாய்க்கால், வரம்புகளைத் திருத்தி
பாடுபட்டு உழைத்துத் தோட்டம்
செய்தால் தான் வாழ்க்கை நடக்கும்.
ஆனால் இந்தக் காலத்தில் எங்கென்று
தெரியாது ஒளித்திருக்கும் கண்ணிகள்
குறித்து அசட்டையாக இருந்தால்
ஆபத்துத் தேடி வரும்......

Baraka

ஆரோக்கிய வாழ்வின் உற்ற நண்பன்

பராகா

கருஞ்சீரக எண்ணெய்
கருஞ்சீரக குளிசை

ஆயுள்வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது.



நிங்கள் நீரிழிவு நோயால் அவதிப்படுபவரா?
அல்லது உடம்பில் அதிக கொலஸ்ரோல் இருப்பதால் கவலைப்படுகிறீர்களா?
கவலை வேண்டாம்....
பராகாவைப் பாவித்துப் பயனடையுங்கள்...

EXPOLANKA COMMODITIES (PVT) LTD.
No.11A, Mile Post Avenue, Colombo - 3, SriLanka.

Distributor in
SIVA ... NAB POONGA
No: 288, Hospital Road,
Jaffna. Tel: 021 - 2567

Fax : 676546
E-Mail : expocom@sri.lanka.net
Web site : www.barakaoil.com

(C/16865)

# தனியார் பல்கலைக்கழகங்கள் நடத்த அனுமதி இல்லை

## அமைச்சரவை தீர்மானம் குறித்து இந்திக

கொழும்பு,மே28

தனியாரால் பல்கலைக்கழகங்கள் நடத்த அனுமதிப்பதில்லை என்று அமைச்சரவை வியாழக்கிழமை தீர்மானித்ததாக உயர்கல்வி அமைச்சர் இந்திக குணவர்த்தன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சகல பல்கலைக்கழகங்களும் அரசின் நிர்வாகத்தின் கீழேயே தொடர்ந்தும் இயங்கும். இது தொடர்பாக அரசாங்கம் புதிய சட்டங்களை இயற்றவோ திருத்தங்களைச் செய்யவோ மாட்டாது எனவும் தெரிவித்த அமைச்சர், மக்கள் விடுதலை முன்னணி சார்பிலான தொழிற்சங்கங்கள் இதற்கு முரணான கருத்துக்களை முன்வைத்து, மாணவர் சமுதாயத்தைக் குழப்பும் போராட்டங்களை நடத்த முன்வருவது நியாயமற்றதாகும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, பல்கலைக்கழகங்கள் தனியார் மயமாக்கப்படமாட்டா என்ற உறுதிமொழியை அமைச்சர் தன்னை நாடாளுமன்றக் கட்டடத்தில் சந்தித்த மாணவர் சங்கப் பிரதிநிதிகளிடமும் நேரில் தெரிவித்தார். (க)

## ஆசிரியருக்கு சிறைத் தண்டனை

கண்டி,மே28

கண்டி, அக்கும்புரவிலுள்ள பாடசாலை ஒன்றின் 14 வயது மாணவி மீது அப்பாடசாலை ஆசிரியரும், ஐ.தே.கவின் பிரதேச சபை உறுப்பினருமான பாலித கல்கந்த என்பவர் துர்நடத்தை புரிந்ததன் பேரில் கண்டி மஜிஸ்ரேட் அவருக்கு ஒன்றரை வருட கால சிறைத்தண்டனையை விதித்தார். (க)

## 47 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை உப அதிபர்
திரு.ஏ.சி.சண்முகலிங்கம் அவர்களின்
அன்புச் சகோதரி
**திருமதி இந்திரசேனா கனகநாயகம்**
அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/சங்குவேலி அ.த.க.பாடசாலை.

(88108)

# 47 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

**தோற்றம்**
20 - 02 - 1953



**மறைவு**
12 - 04 - 2001

## திருமதி இந்திரசேனா கனகநாயகம்(இந்திரா அக்கா)

**உற்றாரை உறவினரை ஊராரைப் பேணி - எங்கள்**
**சொத்தாக இருந்தாய் இவ்வுலகில் - மேலுலக**
**வித்தாகப் போன பின்னும் எம்மனத்தில்**
**விருட்சமாக வாழ்வாய் வேரூன்றி**

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இணுவைச் செகராசசேகரனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (28-05-2001) திங்கட்கிழமை எங்களது இல்லத்தில் திருமதி இந்திரசேனா கனகநாயகம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நடைபெறும். அதனைத் தொடர்ந்து நிகழும் அவருடைய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் துயர்பகிர்வில் பங்குபற்றியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளிலும் மற்றும் இறுதியாத்திரையிலும் கலந்துகொண்டு எமக்குப் பல வழிகளிலும் ஆறுதல் கூறியவர்களுக்கும் பல்வேறு உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

*பிற்குறிப்பு:-*
அழைப்புக் கிடைக்கப்பெறாதவர்கள் தயவுசெய்து இவ்வீட்டுக்கிருத்திய அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொண்டு நிகழ்வுகளில் தவறாது பங்குபற்றும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

*கணவர்* : **திரு.விநாசித்தம்பி கனகநாயகம்**
(முன்னாள் காலி வர்த்தகர், இணுவில்)

*சகோதரர்* : **திரு.ஏ.சி.சண்முகலிங்கம்**
(பிரதி அதிபர், யா/சங்.தமிழ்க்கலவன் பாடசாலை,
உரிமையாளர் 'சண்யோ' கூல்பார், சுன்னாகம்.)

*மைத்துனிமார்* : **திருமதி சந்திராதேவி சண்முகலிங்கம்** (இணுவில்)
**திருமதி மனோன்மணி** (பரமேஸ்வரி, கோண்டாவில் மேற்கு)
**திருமதி மங்கையர்க்கரசி** (மானிப்பாய்.)

*மைத்துனர்* : **இ.தருமராசா** ( Branch Manager, M.P.C.S Nallur.)


*மருமக்கள்* : **பிரசாந்** (கொழும்பு),
**துஷிதா** (மாணவி A/L உடுவில் மகளிர் கல்லூரி),
**ரஜீவ்சாந்** (மாணவன் O/L கொக்குவில் இந்துக்கல்லூரி),
**கிரிஜா, ராஜ், செந்தில்** (கோண்டாவில் மேற்கு),
**உதயகுமார்** (மானிப்பாய்).

"துரைமலர் பொய்கை"
*செட்டிவளவு லேன்,*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

(88100)

# பழைய இசைமரபு குன்றாத வகையில் நவீன இசை நாடகங்கள் தேவை

பழைய இசைமரபு குன்றாத வகையில் புதிய யுக்திகளைக் கையாண்டு, காலத்துக்கு ஏற்ப மக்களின் ரசனையை அறிந்து இசை நாடகங்களை உருவாக்குவது வளர்ந்து வரும் இசைநாடகக் கலைஞர்களின்



அரியாலையூர் இசைநாடகக் கலைஞா 'சோக சோபித சொர்ணக் கவிக்குயில்' **வீ.கே.இரத்தினம்.**

வரலாற்றுக் கடமை.

இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் வளர்ந்துவரும் இசைநாடகக் கலைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதுவே எனது இறுதி ஆசையாகும்.

இவ்வாறு கூறுகிறார் ஈழத்தின் மூத்த இசைநாடகக் கலைஞர்களில் ஒருவரான அரியாலையூர் 'சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில்' வீ. கே.இரத்தினம்(வயது74).



**'அரிச்சந்திர மயான காண்டம்' இசை நாடகத்தில் அரியாலையூர் நடிகர்திலகம் கே.சண்முகலிங்கம் அரிச்சந்திரனாகவும் வீ.கே.இரத்தினம் சந்திரமதியாகவும் தோன்றும் காட்சி**

சுமார் 45 வருடங்களாக இசை நாடகத்துறைக்கெனத் தன்னை அர்ப்பணித்துத் தற்போது வயது முதிர்ந்த நிலையில் - புற்றுநோயின் தாக்கத்துக்கு இலக்கான நிலையில் - இருக்கும் வீ.கே.இரத்தினத்தை 'கலைச்சுடர்' பகுதிக்காக செவ்வி காணச்

**இசை நாடகக் கலைஞர் வீ.கே.இரத்தினம் நடித்த நாடகங்கள் சிலவும் அவற்றில் ஏற்றுக் கொண்ட பாத்திரங்களும்**

| நாடகங்கள் | பாத்திரங்கள் |
| --- | --- |
| அரிச்சந்திர மயான காண்டம் | - சந்திரமதி |
| சத்தியவான் சாவித்திரி | - சாவித்திரி |
| கோவலன் கண்ணகி | - கண்ணகி, மாதவி |
| ஞானசௌந்தரி | - ஞானசௌந்தரி, லேகாள் |
| ஏழுபிள்ளை நல்ல தங்காள் | - நல்ல தங்காள், மூளி அலங்காரி |
| ஸ்ரீவள்ளி | - வள்ளி, நாரதர் |
| சதி நந்தாவதி | - நந்தாவதி |
| ஆரியமாலா | - ஆரியமாலா |
| அல்லி அருச்சுனா | - அல்லி |
| பவளக்கொடி | - பவளக்கொடி |
| சாரங்கதாரா | - சித்திராங்கி |
| பாமா விஜயம் | - நாரதர் |
| திருவிளையாடல் | - ஔவையார் |

சென்றேன்.

முழு மன விருப்புடன் தனது நீண்டநாள் கலைப்பணியை - இசை நாடகப்பணியின் வரலாற்றை அவர் மனந் திறந்து கூறத்தொடங்கினார். கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதிலைத் தந்தார்.

கலைமகள் வீதி, அரியாலை இவரது பிறப்பிடம். அரியாலை அமரர் கவிஞர் ஐயாத்துரை, இசை நாடகக்கலைஞர் பாலசிங்கம், அடங்காப்பிடாரி தி.சிவநேசன் ஆகிய கலைஞர்களை வளர்த்த புண்ணிய பூமி. இந்தப் புண்ணிய பூமியில் 1928 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி பிறந்த இரத்தினம், சைவ ஆசாரசீலமான கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது மாமனாரான செல்லக்கண்டு நாடகப் பாடல்களைப் பாடுவதில் - எழுதுவதில்- கைதேர்ந்தவர். சகோதரர்களான பாலசிங்கம், செல்லத்தம்பி மற்றும் மருமகனான வரதராசா ஆகியோர் நாடகக் கலை வல்லுநர்களாகவும்

**நல்ல இசைநாடக நடிகராகவும், அண்ணாவியாராகவும், இயக்குநராகவும் திகழும் இசை நாடகக் கலைஞர் வீ.கே. இரத்தினம் தமது கலை மரபை அடுத்த தலைமுறையினருக்குச் செவ்வையாகக் கையளித்துள்ளார்.**

*- கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா.*

விளங்குகின்றனர். வைகுந்தவாசன் என்னும் மகன் ஓவியத் துறையில் சிறந்து விளங்குகின்றார்.

இளமையிலேயே இசைநாடகத் துறையில் மிகுந்த ஆர்வம் உடையவராக விளங்கிய வீ.கே.இரத்தினம், அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவைச் சேர்ந்த நீலன் செல்லக் கண்டுவிடம் இசை நாடகத்தைப் பயின்றார்.

1945ஆம் ஆண்டு அரியாலையூர்க் கவிஞர் ஐயாத்துரையுடன் இணைந்து 'கோவலன் கண்ணகி' இசைநாடகத்தில் வீ.கே.இரத்தினம் 'மாதவி' பாத்திரம் ஏற்று நடித்தார். இதுவே இவர் பாத்திரம் ஏற்று நடித்த முதலாவது இசை நாடகமாகும்.

இந்த நாடகம் பற்றிக் குறிப்பிட்ட வீ.கே. இரத்தினம், 'முதன் முதலில் சபையின் முன் தோன்றும் போது சற்று கூச்சம் ஏற்படச் செய்தது. இருப்பினும் நாடகத்தில் சிறப்பாக நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளத்தில் இருந்ததால் துணிந்து நடிக்க முடிந்தது' என்றார்.

வீ.கே.இரத்தினம் இசை நாடகத துறையில் நுழைந்த காலத்தில் நடிகமணி வி.வி. வைரமுத்துவின் காங்கேசன்துறை வசந்தகான சபாவும், அரியாலை கலைமகள் நாடகசபாவும் இணைந்து, அதாவது இரண்டு நாடகசபாக் கலைஞர்களும் ஒன்றிணைந்து 'பதவி மோகம்', 'வள்ளி திருமணம்', 'சத்தியகுமார்', 'அமர்நாத்' ஆகிய நாடகங்களை மேடையேற்றினர்.

இதனால் நடிகமணி வி.வி.வைரமுத்துவுடன் இணைந்து நடிக்கும் சந்தர்ப்பங்கள் வீகே.இரத்தினத்துக்கு கிடைத்தன. நடிகமணி வைரமுத்துவுடன் இணைந்து இவர் நடித்த 'அரிச்சந்திர மயான காண்டம்' (அரிச்சந்திரனாக வி.வி.வைரமுத்துவும், சந்திரமதியாக வீ.கே.இரத்தினமும்) இசைநாடகம் 2ஆயிரம் தடவைகள் மேடை ஏறியது.

சந்திரமதியாக வீ.கே.இரத்தினம் தோன்றும் காட்சி சோகத்தின முழு வடிவத்தையும் அப்படியே படம் பிடித்துக் காட்டும் என்கிறார் அப்போதைய நாடகச சுவைஞர் ஒருவர்.

வீ.கே.இரத்தினம் பல பெண் வேடங்களை ஏற்று நடித்தாலும் சந்திரமதி வேடமே இவருக்குப் புகழைப் பெற்றுக் கொடுத்தது. அன்றைய கலைஞர்களின் பெயர்களுக்கு முன்னால் அவர்கள் ஏற்ற பாத்திரங்களின் பெயர்களைக் குறிப்பது நாடகக் கலைஞர்களுக்கு பெருமை சேர்ப்பதாகக் கருதப் பட்டது. இதனால் தானோ சுபத்திரை ஆழ்வார், அந்திராசி பொன்னு, யமன் மார்க்கண்டு என்பது போல வீ.கே.இரத்தினமும் 'சந்திரமதி இரத்தினம்' என அழைக்கப்பட்டார்.

நடிகமணி வி.வி.வைரமுத்துவுடன் இணைந்து 'சத்தியவான் சாவித்திரி', 'நல்லதங்காள்', 'ஸ்ரீவள்ளி', 'ஞான சௌந்தரி', 'கண்ணகி', சாரங்கதரன்' முதலிய இசை நாடகங்களிலும் 'ஞான சௌந்தரி', 'வள்ளி திருமணம்', 'நந்தனார்', 'பிரகலாதன்'

**இன்று யாழ்ப்பாணத்தில் 'சந்திரமதி இரத்தினம்' என்றால் எவருக்கும் தெரியும். அந்தளவில் வீ.கே.இரத்தினம் பெண் பாத்திரமேற்று பல பாராட்டுக்களைப் பெற்றதுடன் முத்திரையும் பதித்துள்ளார்.**

*- கலைஞர் செல்லையா மெற்றாஸ்மயில்.*

ஆகிய நாடகங்களிலும் வீ.கே.இரத்தினம் நடித்துள்ளார்.

கலாவினோதன் அண்ணாச்சாமி,

## இதுவே தன் இறுதி ஆசை என்கின்றார் வீ.கே.இரத்தினம்



**'அரிச்சந்திர மயான காண்டம்' இசை நாடகத்தில் நடிகமணி வி.வி. வைரமுத்து அரிச்சந்திரனாகவும், வீ.கே.இரத்தினம் சந்திரமதியாகவும் தோன்றும் காட்சி.**

அல்வாயூர் சோதிடர் தம்பையா, வி. என்.செல்வராசா, வி.ரி.செல்வராசா, ம.பொ.தைரியநாதன், பக்கிரி சின்னத்துரை, வி.நற்குணம், பி.சண்முகலிங்கம், வி.கே.பாலசிங்கம் ஆகிய




பிரபல நாடகக் கலைஞாகள் வீ.கே. இரத்தினத்துடன் இணைந்து நடித்துள்ளனர்.

வீ.கே.இரத்தினத்தின் நெறியாள்கையில் 'அரிச்சந்திர மயான காண்டம்', 'சத்தியவான் சாவித்திரி', 'ஸ்ரீவள்ளி', 'பாமாவிஜயம்', 'ஞானசௌந்தரி', 'ஏழுபிள்ளை நல்லதங்காள்', 'பக்தபிரகலாதா', 'சாரங்கதாரா' ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன.

கண்டி புஸ்பதான மண்டபம், பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்பு சைவமங்கையர் கழகம், இலங்கை வானொலி நிலையம், திருகோணமலை கணேசன் தியேட்டர் ஆகிய



**பாரம்பரியக் கலைகள் மேம் பாட்டுக் கழகம் நடத்திய மூத்த கலைஞர் கௌரவிப்பு விழாவில நல்லூர் உதவி பிரதேச செயலர் எஸ்.வேன் முருகோன்பிள்ளை கலைஞருககுப் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கின்றார்.**

வற்றில் வீ.கே.இரத்தினத்தின் இசை நாடகங்கள் மேடையேறின.

வீ.கே.இரத்தினத்தின் நடிப்புத் திறமையினை அறிந்த - உணர்ந்த - பலரும் பல்வேறு நிகழ்வுகளில் இவருக்கு பாராட்டு விழாக்களை நடத்திப் பட்டங்களையும், பொற்கிழிகளையும் வழங்கியுள்ளனர்.

1963இல் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயச் சமூகத்தினர் இவருக்கு 'சோக சோபித சொர்ணக் கவிக்குயில்' என்ற பட்டததினை வழங்கிக் கௌரவித்தனர்.

1966 ஆம் ஆண்டு அரியாலை ஸ்ரீகலைமகள் நாடகசபாவினர் பாராட்டு விழா ஒன்றை நடத்தினர். அதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான வி.என்.நவரத்தினம் இவருக்கு பொன்னாடை போர்த்து, பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

1993ஆம் ஆண்டு அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் வீ.கே.இரத்தினத்தின் நெறியாள்கையில் அமைந்த 'பண்டாரவன்னியன்' நாடகம் மேடையேறியது. அப்போது பேராசிரியர் கா.சிவத்தம்பி இவரைப் பாராட்டிக் கௌரவித்தார்.

யாழ்.திறந்தவெளி அரங்கில் 'மயான காண்டம்', 'சத்தியவான் சாவித்திரி' ஆகிய நாடகங்களில் வீ. கே.இரத்தினம நடித்துக் கொண்டிருந்த போது தென்னிந்திய நடிகர் 'குலதெய்வம்' இராஜகோபால் மேடையில் ஏறி அவரைக் கட்டியணைத்து 'ஈழத்துக் கண்ணாம்பாள்' என்று பட்டம் சூட்டிக் கௌரவித்தார்.

**"இரவல் குரல் ஏற்காமல் தாமாகவே சகலதுறைகளிலும் நாடக இலக்கணத்துடன் சுயமாக இயங்கி, நடித்து நாடக இலக்கணத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்குபவர் வீ.கே.இரத்தினம்."**

*-நடிகமணி வீ.வீ.வைரமுத்து*

கட்டட ஒப்பந்தககாரராகத் தொழில் புரிந்த வீ.கே.இரத்தினம் பல கட்டடங்களை சிறப்புடன் அமைத்த சிறந்த கட்டடக் கலைஞருமாவார்.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு கலைஞர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வீ.கே.இரத்தினத்துக்கு, மாதாந்தம் 2 ஆயிரம் ரூபாவை வழங்கி வருகின்றது. ☆

## செய்தித் துளிகள்

### மந்திகை ஆஸ்பத்திரியில் 'கிளினிக்'குகள்

சாவகச்சேரி,மே28

மந்திகை ஆதார வைத்திய சாலையில் வாரத்தில் ஆறு தினங்கள் 'கிளினிக்'குகள் நடைபெற்றுவருகின்றன.

திங்கள் - சத்திரசிகிச்சைக் கிளினிக், செவ்வாய் - இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான கிளினிக், புதன் - மகப்பேற்றுக் கிளினிக். வியாழன் - பொதுமருத்துவக் கிளினிக், வெள்ளி - இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கான கிளினிக், சனி - சலரோகம் தொடர்பான கிளினிக். (சு-31)

### 'சைவநீதி'யின் போட்டியில் பரிசு பெறுவோர்

யாழ்ப்பாணம்,மே28

"சைவநீதி" நடத்திய உயர் தகைமைத் தேர்வுப் பரீட்சையில் பரிசு பெற்றவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விவரம் வருமாறு:-

★ முதலாம் இடம் (தங்கப் பதக்கம்) நா.நவராஜ் - கொக்குவில்

★ இரண்டாம் இடம் (வெள்ளிப் பதக்கம்) க.முத்துவேலு - இமையாணன் கிழக்கு.

★ மூன்றாம் இடம் (வெண்கலப் பதக்கம்) கை.நமசிவாயக்குருக்கள் - கரணவாய் கிழக்கு.

ஆறுதல் பரிசுகளுக்கு உருத்திரா தேவி - பரமநாதன், நரஞ்சிதா, செ.சசிகலா, ந.ரஞ்சினி, ப.அனுராதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் அடுத்த மாதம் 2ஆம் திகதி "சைவநீதி" சரஸ்வதி மண்டபத்தில் நடத்தும் சைவசித்தாந்த எழில் ஞானப் பெருவிழாவில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (சு-4)

### மரத்திலிருந்து விழுந்து படுகாயம்

சாவகச்சேரி,மே28

பட்டுப்போன தென்னை மரத்தில் ஏறித் துண்டு போட்டு தறித்துக் கொண்டிருந்தவர் மரம் அடியுடன் முறிந்து வீழ்ந்ததினால் படுகாயமடைந்தார்.

பருத்தித்துறை வறாத்துப்பளையைச் சேர்ந்த ரி.மனோகரன் (37 வயது) என்பவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சு-31)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



ஜனனம் 21 - 06 - 1933

மரணம் 07 - 06 - 2000

அமரர்

## செல்லர் பாலசுப்பிரமணியம்

*(முன்னாள் இ.போ.ச. பஸ் சாரதி)*

"பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் நெஞ்சங்களில்
நேசக்கரம் நீட்டிய தந்தையே!
நீ பிரிந்து நீண்டவழி சென்றாலும்
நித்தம் நித்தம் எம்மை வாட்டும் - உன்
நினைவலைகள் இங்கே!"

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டிக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, மகள், மகன்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்.

*கலட்டி ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு.*

(88312)

# 90ஆம் நாள் நினைவஞ்சலியும்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் 05 - 05 - 1931

மறைவு 28 - 02 - 2001

அமரர்

## தளையசிங்கம் அழகரட்ணம்

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே!
தீபம் அணைந்தாலும் எமது மனங்களில்
என்றென்றும் ஒளி வீசிக் கொண்டேயிருப்பீர்கள்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

*19, சிவன் புதுறோட்,*
*திருநெல்வேலி.*

(88319)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 07 - 03 - 1926

விண்ணில் 07 - 06 - 2000

## அமரர் கந்தையா சிவப்பிரகாசம்

(முன்னாள் காலி புகையிலை வியாபாரி,
வேலணை மேற்கு, வேலணை)

திதி : 28.05.2001

எங்கள் அன்பு அப்பாவே!
ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தாலென்ன?
அரவணைக்க ஆயிரம் உள்ளமிருந்தாலென்ன?
ஆறுதல் கூற இறைவன் வந்தாலென்ன?
அப்பா! உங்கள் அன்புக்கு ஈடாகுமா?

உங்கள் நினைவு என்றும் எம்மைவிட்டு அகலாது நீங்கள் என்றைக்கும் வழிகாட்டியாய் இருந்து எமக்கு வழிகாட்டிச் செல்லும். உமது ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*வேலணை மேற்கு,*
*வேலணை.*

(88299)

## பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம்,மே28

பேராதனை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடங்களில் சிரேஷ்ட முதுநிலைத் தொழில் நுட்ப உத்தியோகத்தராக 37 வருடங்கள் கடமையாற்றி ஓய்வுபெறும் ச.தேவதாசனின் பிரிவுபசார நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.(க-10)

## மனநோயாளருக்கு வாத்தியக் கருவிகள்

மந்திகை ஆதாரவைத்தியசாலையில் உள்ள மனநோய் சிகிச்சைப் பிரிவில் தங்கியுள்ள நோயாளருக்கு உளநல ரீதியில் சிகிச்சையளிப்பதற்கென எல்லைகடந்த நாடுகளின் மருத்துவ சேவையினர் (எம்.எஸ்.எவ்) வாத்தியக் கருவிகள், விளையாட்டு உபகரணங்கள், வானொலிப்பெட்டி ஆகியவற்றை வழங்கியுள்ளனர்.

இவற்றை வைத்துப் பயன்படுத்துவதற்கென ஆஸ்பத்திரியில் முன்னர் ஜெனரேற்றர் அறையாகப் பயன்படுத்தப்பட்ட கட்டடத்தை எம்.எஸ்.எவ் நிறுவனத்தினர் புனரமைத்துள்ளனர்.

மனநோயாளர்களுக்கு இவற்றைப் பயன்படுத்துவதற்கான பயிற்சியை வழங்க யாழ். உளநல சங்கத்திலிருந்து இரு உத்தியோகத்தர்கள் அடுத்தவாரம் தொடக்கம் வருகைதரவுள்ளனர்.

எம்.எஸ்.எவ் நிறுவனத்தினரால் தெல்லிப்பழை உளநல சங்கத்திடம் வழங்கப்பட்ட இந்த உபகரணங்களை பேராசிரியர் தயா சோமசுந்தரம் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்ததாக பதில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் என்.ஜே.ஞானசுதன் தெரிவித்தார். (க-31-117)

## ஆத்மீகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே28

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடத்தும் ஆத்மீகக் கருத்தரங்கும் விரிவுரையும் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் என்.சிவகடாட்சம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் "சுவாமி விவேகானந்தரின் செய்தி" என்ற தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா சிறப்புரையாற்றவுள்ளார். (க-4)

## முக்கியமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு

தென்மராட்சி,மே28

மந்திகை ஆதார வைத்திய சாலையில் இரத்த அழுத்தம், ஆஸ்மா, சலரோகம், மனநோய் ஆகிய கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்களுக்கு வழங்கப்படும் குளிசைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் தனியார் மருந்தகங்களில் வாங்குமாறு அறிவுறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரத்த அழுத்த நோய்க்குப் பயன்படுத்தும் அல்டோமெற், ஆஸ்மாவுக்கு பயன்படுத்தும் வென்டோலின், பிறிட்னிஸ்னோ, பிரிட்டோன் சலரோகத்திற்கு பயன்படுத்தும் டயோனில், தஸ்ரினோ ஆகியனவும் மனநோய்க்குப் பயன்படுத்தும் அனைத்து மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

விலை கூடிய இந்தக் குளிசைகளை தனியார் கடைகளில் வாங்குவதற்கு பலர் கஷ்டமுறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-117-31)

## வேலைத் திட்டங்கள் குறித்துச் சுற்றறிக்கை

வலி.மேற்கு,மே28

வடக்கு-கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களம், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய வேலைத் திட்டங்கள் பற்றி சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்றறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளது.

சமய பண்பாட்டு நடவடிக்கைகள், கிராம அபிவிருத்தியின் விவசாயமும், சுகாதார நடவடிக்கைகள், குடிசைக் கைத்தொழில், சிறுவர் பாடசாலைகள், அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், கிராம மகளிர் மேம்பாடு, விளையாட்டும் பொழுதுபோக்கும், சிரமதான நடவடிக்கைகள் போன்ற 9 வேலைத்திட்டங்களையும் சங்கங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-175)

# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



மீசாலை வடக்கைச் சேர்ந்த
திரு. திருமதி சிவானந்தம் – வசந்தி
தம்பதிகளின் செல்வப் புதல்வி

## செல்வி தேனுஷா

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (28-05-2001) திங்கட்கிழமை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். தேனுஷாவை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், ஜெயந்தி சித்தி, சித்தப்பா, அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், தாத்தா, அத்தை மற்றும் உறவினர்கள் இறையருள் பெற்று ஆரோக்கியத்தோடு தீர்க்காயுசுடன் சிறப்புற்று நீடூழிவாழ வாழ்த்துகின்றனர்.

சி.சிவானந்தம்
சிவா உதிரிப்பாக வாணிபம்,
கண்டி வீதி,
கொடிகாமம்.

தற்காலிக முகவரி:
*இலக்கணாவத்தை,*
*உடுப்பிட்டி.*

(88186)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 - 05 - 1951

மறைவு 30 - 05 - 1998

## அமரர் காளிமுத்து தங்கவேல்

*திதி: 28.05.2001*

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து,
எமைப்பிரிந்து மூன்று ஆண்டுகள் சென்றாலும்,
உம் நினைவு எமைவிட்டுப் பிரியாது!

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

*45, பாற்பண்ணை வீதி,*
*திருநெல்வேலி.*

(88318)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 30 - 11 - 1933

மறைவு 28 - 04 - 2001

## திருமதி மகேசன் தங்கம்மா

28-04-2001 அன்று இறைவனடிசேர்ந்த எங்கள் குடும்பத்தலைவியின் மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்கள், அனுதாபம் தெரிவித்தவர்கள், சகல வகைகளிலும் பல்வேறு உதவிகள் செய்தவர்கள் ஆகிய யாவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (28-05-2001) திங்கட்கிழமை நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*உடையார் வளவு,*
*சுன்னாகம்.*

(88259)

# கொழும்புத்துறை மீள் குடியமர்வு குறித்து ஆராய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே28

கொழும்புத்துறைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீண்டும் தமது பகுதியில் குடியமரவும், அங்குள்ள இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங்கள் புனரமைக்கப்படுவதற்கும், மக்கள் தமது தொழில்களை மேற்கொள்வதில் உள்ள சிரமங்களுக்குத் தீர்வு காண்பதற்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் இந்து மற்றும் கிறிஸ்தவ குருமார்களையும், பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்களையும், சனசமூக நிலையப் பிரதிநிதிகளையும், மீன்பிடி, தும்புத் தொழில், மாதர் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்களையும், இந்து, கிறிஸ்தவ ஆலயங்களின் பரிபாலகர்களையும், ஜே/61, ஜே/62 ஆகிய கிராம அலுவலர்களையும் கலந்துகொள்ளுமாறு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(க-10)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,மே28

சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டி திருஇருதயக் கல்லூரி மண்டபத்தில் கூட்டுறவுப் பரிசோதகர் ஆ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஜே/300 கிராம அலுவலர் தெரிவித்துள்ளார்.

(க-10)

## மன்னாரில் தேடுதல்

மன்னார் நகரின் பிரதான வீதிகளை கடந்த வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு சுற்றிவளைத்த படையினர் 11 மணிவரை தேடுதல் நடத்தினர். பொதுமக்களும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இராணுவத்தினரும் பொலீஸாரும் கூட்டாக நடத்திய மேற்படி சுற்றிவளைப்பு தேடுதலின்போது பொதுமக்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஆசிரியர் செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 3 வகுப்புகளில் ஆங்கிலப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலச் செயலமர்வுகள் எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும். ஆசிரியர்கள் தரம் 3 வகுப்புகளில் பயன்படுத்தும் பாட நூல்களைக் கொண்டுவருமாறும் ஏனைய ஆசிரியர்களும் செயலமர்வில் கலந்து கொள்ளலாம் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.


# பரத நாட்டிய அரங்கேற்றம்

நாட்டியக்கலைமணி செல்வி அகல்யா சுந்தரம்

அவர்களின் மாணவி



செல்வி எலிசபெத் சுபத்திரா பீற்றர்சிங்கம்

அவர்களின்

பரத நாட்டிய அரங்கேற்றம்

விழாத் தலைவர்
இ.ரட்ணம்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்)

பிரதமவிருந்தினர்
பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்
(முதுநிலைத் தமிழ்ப் பேராசிரியர்,
பீடாதிபதி, உயர்பட்ட ஆய்வுப் பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
யாழ். பல்கலைக்கழகம்.

சிறப்பு விருந்தினர்கள்
கலாநிதி சபா ஜெயராசா
தலைவர், இராமநாதன் நுண்கலைக்கழகம்,
(நடனத்துறை) யாழ். பல்கலைக்கழகம்.
திருமதி கிருஷாந்தி இரவீந்திரா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
(நடனத்துறை) யாழ். பல்கலைக்கழகம்.
திருமதி க.பொன்னம்பலம்
அதிபர்,
யா/வேம்படி மகளிர் கல்லூரி

இடம் : இளங்கலைஞர் கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.
காலம் : 03-06-2001 ஞாயிற்றுக்கிழமை காலை 9.35மணி

உற்றார் உறவினர்கள், நண்பர்கள், ஆர்வலர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.117, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.எண் 021-2225

தங்கள் நல்வரவை நாடும்:
பீ.அ.யூ.இராஜசிங்கம்,
பீ.ரோ.ரொ.விக்கிரமசிங்கம்.
(சகோதரர்கள்)

(88169)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 04 - 1926



மறைவு 07 - 06 - 2000

அமரர்
சின்னப்பொடி சரவணை

திதி: 28.05.2001

எங்கள் குடும்பத்தின் தெய்வமாக
பண்பின் உறைவிடமாக
அன்பூட்டி அறிவூட்டி ஆதரவாய்
எம் சொத்தாக இருந்த தந்தையே!
ஆறாத பிரிவுத்துயரில் எமை ஆழ்த்திவிட்டு
அழியாத நினைவுகளுடன் என்றும் எம்
உள்ளத்தில் உணர்வில் வீற்றிருப்பீர்கள்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
உரும்பிராய் வடக்கு.
சமாதியடி,
உரும்பிராய்.

(88304)

நிரந்தர முகவரி:
அம்பனை,
தெல்லிப்பழை மேற்கு,
தெல்லிப்பழை.



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 20 - 07 - 1929



ஆண்டவன் அடியில் 07 - 06 - 2000

அமரர் பிரம்மஸ்ரீ இ.சுப்பிரமணியக் குருக்கள்

(வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப்பிள்ளையார் கோயில் பிரதமகுரு - மணிஐயா)

திதி: 28-05-2001

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய்த்
திகழும் நீங்கள், இம்மண்ணுலகை விட்டுச் சென்று,
வருடம் ஒன்று சென்றாலும் ஐயா உங்கள் நினைவு
என்றும் எங்கள் உள்ளத்தில் நிலைத்து நிற்கும்! உங்கள் திரு
உருவம் எப்போதும் மறையவே மறையாது!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகப்
பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவப்பிரகாசம் வீதி,
ஸ்ரீ விஸ்வலிங்கப்பிள்ளையார் கோயில்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(88139)

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

# முதலாம் ஆண்டு நினைவாக...

தாயின் மடியில் 25 - 06 - 1932



இறை அடியில் 07 - 06 - 2000

அமரர் சின்னத்துரை கனகசபை

(ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி)

திதி : 28.05.2001

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் - எங்கள்
அகத்தினில் உறைந்து தீபமாய் ஒளிர்கின்றீர்!
நீண்ட நினைவுகளைச் சுமந்து வாழ்கின்றோம்,
நினைவழியா உங்கள் வாழ்க்கையை எண்ணி!

'ஈஸ்வரி இல்லம்'
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
கந்தரோடை,
சுன்னாகம்.

(88255)

மனைவி : க.பரமேஸ்வரி,
பிள்ளைகள் : ம.மனோராணி,
ப.ஜயந்தராணி,
க.ஜயந்தகுமார்,
ப.சறோஜாராணி,
க.பிரதீப்குமார்,
மருமக்கள், மைத்துனர்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சிவகுமார் சிவஞானமங்கை (தகப்பனின் பெயர் தம்பித்துரை) என்பவரின விசேட, தேசிய அடையாள அட்டைகள் (முறையே இல. 091045483, 726330662v) 25.05.2001 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஜெயா தொலைத்தொடர்பு, இராசவீதி, அச்சுவேலி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (88325)

## ஆண்டு 5 புலமைப் பரிசில்

அனுபவம் மிக்க ஆசிரியர் அம்பிகைபாகனின் புதிய புத்தகம், ஆண்டு 5 புலமைப் பரிசில் 2001-2002 அடிப்படைக் கல்வியும் தரமான பயிற்சிகளும் அடங்கியது. சென்ற ஆண்டு வினாப்பத்திரமும் விடைகளும் தரப்பட்டுள்ளன. விலை ரூபா 240/=. பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ். தொலைபேசி இல. **2365** (88285)

## வீடு விற்பனைக்கு

**305/1,** ஸ்ரான்லி வீதியில் (விக்னா ரியூட்டறி முன்பாக) **11/2** பரப்புக் காணியில் அமைந்த 5 அறைகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. கடைகள் கட்டுவதற்கு மிகவும் உகந்த இடம். தொடர்பு கொள்ள:- தம்பிஜயா, **62/02,** ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம். (88252)

## இது இந்துமதம்

தகுந்த சான்றுகளுடன் இந்து மதம் பற்றிய உண்மைகளைத் தெளிவாகத் தருகிறது சாமிஜி எழுதிய 'இது இந்துமதம்' என்னும் நூல். யாழ்ப்பாணக் கலாசாரத்தின் ஆணிவேராகிய சைவசித்தாந்தத்தில ஆர்வம் கொண்டோர் அவசியம் படிக்கவேண்டிய புத்தகம். விலை ரூபா 50/=. பரணன், 138, இராசாவின்தோட்டம் யாழ்ப்பாணம். தொலைபேசி - **2365** (88286)

## வேலையாள் தேவை

கோழிகள், ஆடுகள், பூந்தோட்டம் பராமரிப்பதற்கு ஓர் ஆண்பிள்ளையும், ஒரு சிறுவனும் தேவை. தங்கியிருக்க வசதியுண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (88324)

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள **Kelvinator** இரட்டைக் கதவு குளிர் சாதனப் பெட்டி, **Hoover Washing Machine (Single tub)** என்பன உடனடி விற்பனைக்குண்டு. கிழமை நாள்களில் மாலை 4.00 மணிக்குப் பின் பார்வையிடலாம். டாக்டர்.வே. யோகநாதன், 178, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (88297)

## இறைச்சிக்கோழி

புறொயிலர் **1Kg 140/=** விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் லவ்பேட்ஸ் பச்சை, நீலம், மஞ்சள், வெள்ளை விற்பனைக்குண்டு. தொடர்பு:- 31,மான்ஸ், பாடசாலை வீதி, உடுவில்,- சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (88292)

## இலக்கியக் கட்டுரைகள்

**A/L** மாணவர்களே இந்த நூலில உள்ள 38 கட்டுரைகளும் உங்களுக்கு நிச்சயம் பயன்படும். எல்லா வகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய கட்டுரைகள் அல்லவா? (88223)

---

# நெஞ்சம் மறக்குமா......?



## கவிஞர்
## யாழ் ஜெயம்

உலகக் கவிஞனாய்
உயிர்ப்பூட்டும் காப்பாளனாய்
அறிவூட்டும் அன்பாசானாய்
வழிகாட்டிய நீர் எங்கு சென்றீர் ஐயா?

(88327) - கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்.

---

செஞ்சொற்செல்வர்

# பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்



நாவால் - நெஞ்சால் நாள்தோறும்
நாடுகள் தோறும், நற்பணிபுரிந்து
நாற்பத்தோராம்
அகவையில் அடிபதிக்கும்
**செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்**
அவர்கள் பல்லாண்டு தேகசுகத்துடன் நீடூழி
வாழ வாழ்த்திப் பிரார்த்திக்கின்றோம்.

சி.சிவசரவணபவன் (சிற்பி)
செ.மகாதேவன் J.P
ஆ.சி.கணேசவேல் J.P

*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (88329)

---

# அமரருக்கு எமது அஞ்சலி



## திருமதி
## இந்திரசேனா
## கனகநாயகம்

**அன்புக்கோர் இலக்கணமாய் அகிலம் போற்ற வாழ்ந்தீர்!**
**இன்று உமது மறைவால் கலங்குகின்றோம் நாம்.**
**பண்போடு வாழ்ந்த நீங்கள் மறைந்தது நமக்குப் பேரிழப்பாகும்.**

அன்னாரின் மறைவு எம்மைச் சோகக் கடலில் ஆழ்த்திவிட்டது. பிரிவால் கலங்கித் தவிக்கும் அன்பு அண்ணன் கனகநாயகம் அவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கோண்டாவில் மேற்கு ஸ்ரீ காளி அம்பாளையும் ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையாரையும் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கோண்டாவில் மேற்கு**
**ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் (காளி கோயில்)**
(88326) **ஆலய பரிபாலன சபையினர்.**

---

# இடம்பெயர்ந்தோருக்கான கலந்துரையாடல்

J/312, J/305 கல்வயல், மட்டுவில் மத்தி, மட்டுவில் வடக்கு, ஸ்கந்தபுரம், நுணாவில், சாவகச்சேரி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்தோர் அனைவரையும் நாளை (29-05-2001) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் மீளக் குடியமர்தல் சம்பந்தமாகக் கலந்துரையாடுவதற்கு ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"சிவபவனம்"
*கலைமணி வீதி,*
*கட்டைப்பிராய்,*
*யாழ்ப்பாணம்.*

திருமதி
சதாசிவம் இராஜலக்சுமி
*அமைப்பாளர்*
(88330)

---

# கண்ணீர்க் காணிக்கை

சிற்பாசாரியார், சிற்ப ரத வித்தகர்
கலாபூஷணம்

## ஆறுமுகம் ஜீவரட்ணம்

ஸ்தபதி அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மு.சிவலிங்கம்
ஆதீன கர்த்தா,
(88322) இணுவில் சிவகாமி அம்மன் தேவஸ்தானம்.

---

# மரண அறிவித்தல்

## மரியாம்பிள்ளை விக்ரர் (யாழ் ஜெயம்)

'எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்'
1 கொரி. 15:53

யாழ். வாசரும், 67, வேம்படி வீதியை வதிவிடமாகக் கொண்டவருமான மரியாம்பிள்ளை விக்ரர் (யாழ் ஜெயம்) 22.05.2001 செவ்வாய்க்கிழமை அதிகாலை தமது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை - விக்ரோரியா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வரும், எலிசபெத்தின் பாசமிகு பத்தாவும், வேதராசாவின் (உதயன்) அன்புச் சகோதரரும், அலோசியஸ், லில்லியோசப், அலெக்சாந்தர், அன்ரன், சாந்திமத்தியூஸ், அசெம்ரா சூரியகுமார், ஜெயசீலிக்கின்ஸ்லி, அமரநாத் ஆகியோரின் அன்புத் தந்தையும், குணமணி, D.R.யோசப் (C.E.B),அருந்தா, மீனா, வெஸ்லிமத்தியூஸ் (கல்வாரி பூரண சுவிசேச சபை), சூரியகுமார், கிங்ஸ்லி, குமுதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் லில்லி மேரியின் (பெரியவிளான்) அன்பு மைத்துனரும், அகஸ்ரின்ஜீவாவின் சிறிய தந்தையும் ஆவார்.

இன்று (28.05.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு (புதிய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெறும் திருவழிபாட்டு ஆராதனையைத் தொடர்ந்து, அமரரது பூதவுடல் அங்கிருந்து பிற்பகல் 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக திருமறைக் கலாமன்றத்தில் வைக்கப்படும். பின்னர் அங்கிருந்து இறுதி ஆராதனைக்காக பிற்பகல் 4.00 மணிக்கு புனித மரியாள் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின்பின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

நண்பர்களும் உறவினர்களும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

*67, வேம்படி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (88323)

தகவல்:
**மனைவி**

---

# கலாலயா பயிற்சியகம்

**மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

## மகளிருக்கான
## மனைப் பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

✣ **கேக் ஐசிங்**
(பட்டர் ஐசிங், றோயல் ஐசிங், பாச்மென்ட் ஐசிங், புறொஸ்றி ஐசிங், Fondont Icing மற்றும் மாச்சீனி அலங்காரம்)

✣ **உணவு தயாரித்தல்**
(கீழைத்தேச, மேலைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள், புடிங் வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், சூப் வகைகள் தயாரித்தல் இத்துடன் உணவை அலங்கரிக்கும் முறை, மரக்கறிகளைக் குடைந்து உருவங்கள் செய்தல், மேசை அலங்காரம், உணவு பரிமாறும் விதம்)

✣ **உடை தயாரித்தல்**
(குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள், கதிரை விரிப்பு, தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)

✣ **பூவேலை**
(ஸ்றொக்கிங் நெற், டிப் இன் மலர்கள், Panclay மலர்கள், பேப்பர் றிபன் மலர்கள், துணியினால் மலர்கள், மலர்ச் செண்டுகள் Bouquet செய்தல்)

✣ **கைவேலை**
(பேப்பர் அலங்காரம், Soft Toys, வைக்கோல் வேலை, கழிவுத் துணி வேலை, கம்பளி நூல் வேலை, றிபன் வேலை)

✣ **பப்றிக் வர்ணம் தீட்டுதல் (FABRIC PAINTING)**
(கதிரை விரிப்பு, தலையணை உறை, உடைகள், சாடிகளில் வர்ணம் தீட்டுதல்)

ஆகிய பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படும். மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், முக ஒப்பனை, கோலம் வகுப்புகள் நடைபெறும்.

- *பயிற்சிக்காலம் 6 மாதம்.*
- *பயிற்சியின் முடிவில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.*
- *இப் பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.*
- *கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் காலை 9 மணிமுதல் பி.ப. 1.00 மணிவரை நடைபெறும்.*
- *சனி, ஞாயிறு பயிற்சிகள் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை நடைபெறும்.*

✦ **சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் :- 03-06-2001 (ஞாயிறு)**
✦ **கிழமை நாள் புதிய வகுப்புகள் ஆரம்பம் :- 04-06-2001 (திங்கட்கிழமை)**

மேலும் விபரங்களுக்கு காலை 9.00 மணிமுதல் பி.ப. 2.00 மணிவரை நேரில் தொடர்புகொள்ளவும்.

(C/16891) **- இயக்குநர்.**

## செய்தித் துளிகள்

ஹொங்கொங்கில் வர்த்தக வளாகம் ஒன்றில் கட்டடப் பணிகளுக்காக தரையைத் தோண்டிய போது இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட 'மோட்டார்' ரகப் பீரங்கிக் குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

★ ★ ★

செச்சினியா உட்பட பிற நாடுகளின் தீவிரவாதிகளுக்கு பயிற்சிகள் வழங்கும் முகாம்களை மூடாத வரை ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்களுடன் பேச்சு வார்த்தைகளுக்கு இடமில்லை என்று ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

★ ★ ★

ஜெருசலேமில் 4 மாடித் திருமண மண்டபம் இடிந்து விழுந்ததில் 15 பேர் உடல் நசுங்கி இறந்தனர்; சுமார் 300 பேர் காயமடைந்தனர்.

கட்டடம் இடிந்து விழுந்த சமயத்தில் 600 பேர் வரை திருமண விருந்தில் கலந்து கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

★ ★ ★

சியாராலியோனில் உள்நாட்டு மோதலை முடிவுக்குக் கொண்டுவர கடந்த வாரம் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின்படி கிளர்ச்சியாளர்களும் அரச ஆதரவுப் படைகளும் ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்கியுள்ளதாக ஐ. நா. தெரிவித்துள்ளது.

★ ★ ★

பாண்டிச்சேரி முதலமைச்சர் ப. சண்முகம் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படாமலேயே தொடர்ந்து இரண்டாவது தடவையும் முதலமைச்சராகப் பதவியேற்று சாதனை படைத்துள்ளார்.

முன்னதாக த. மா. கா. ஆதரவை விலக்கியதால் தி. மு. க. ஆட்சி கவிழ்ந்த போது, ப. சண்முகம் முதலமைச்சராகப் பதவியேற்று, பின்னர் இடைத் தேர்தலில் வென்று சட்டமன்ற உறுப்பினரானார்.

★ ★ ★

முன்னாள் முதலமைச்சரும், தி. மு. க. தலைவருமான கருணாநிதி தற்காலிக சபாநாயகராக கடமையாற்றிய அப்துல் மஜீதின் அலுவலக அறையில் சட்டமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்தார்.

★ ★ ★

வடஇந்தியாவில் 199? ஆம் ஆண்டு மதக் கலவரங்கள் நடந்த போது மும்பையில் 9 பேர் இறக்கக் காரணமான பொலீஸ் துப்பாக்கிச் சூடு தொடர்பாக மும்பை பொலீஸின் முன்னாள் இணை ஆணையாளர் ஆர். டி. தியாகி உட்பட 15 பேர் மீது நேற்று முன்தினம் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

★ ★ ★

இந்தியாவின் அசாம் மாநிலத்திலிருந்து மாநிலங்களவைக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் மத்திய நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் போட்டியிட உள்ளதாக அசாம் முதல்வர் தருண் கோகுல் தெரிவித்தார்.

★ ★ ★

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான் அரசு சிறுபான்மை மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு பிரத்தியேக உடை விதியை அமுல்படுத்தத் திட்டமிட்டிருப்பதை ஐரோப்பிய ஒன்றியம் கண்டித்துள்ளது.

★ ★ ★

# பிரிட்டனில் இனக்கலவரம்!

## ஆசியர் - வெள்ளையர் இடையே

லண்டன், மே 28

பிரிட்டனில் மான்செஸ்டருக்கு அருகே 'ஓர்காம்' நகரில் இனக்கலவரம் மூண்டுள்ளது.

வெள்ளையினத்தவருக்கும் ஆசிய இனக் குழுவினருக்கும் இடையே நிகழ்ந்த கலவரத்தில் இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் ஆயுதங்களை உபயோகித்துத் தாக்கியதாகவும்- ஆசிய இனத்தைச் சேர்ந்த 500 பேர் அடங்கிய கும்பல் ஒன்று பொலிஸார் மீது பெற்றோல் குண்டுகளை வீசியதாகவும்- அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஓர்காமில் சிறுபான்மை இன மக்களே அதிகம் வாழ்வது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பலஸ்தீனர் மீதான தாக்குதலை நிறுத்த அமெரிக்கத் தலையீடு.

## இஸ்லாமிய மாநாடு கோரிக்கை

டோஹா, மே 28

பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்டுள்ள தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த அமெரிக்கா உடனடியாகத் தலையிட வேண்டும்.

இவ்வாறு இஸ்லாமிய மாநாட்டுத் தாபனம் கேட்டுள்ளது.

டோஹாவில் கூடிய இந்த அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள், பலஸ்தீன மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள ஆபத்தான நிலை குறித்து ஆராய்ந்தனர்.

இந்தக் கூட்டத்தில் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் உரையாற்றினார்.

பலஸ்தீனப் பகுதிகளில் மரணங்கள் அதிகரிப்பதற்கு அமெரிக்காவும் ஒரு காரணம் என்றும்—

இந்த இறப்புக்களைத் தடுக்கச் சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும் என்றும்—அப்போது அரபாத் தெரிவித்தார்

இதற்கிடையில், அமெரிக்காவின் மேற்காசியாவுக்கான சிறப்புத் தூதர் வில்லியம் பூன் இன்று இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் ஆகியோரைச் சந்தித்துப் பேசுகிறார்.

மேற்காசிய மோதல்கள் தொடர்பாக விசாரணை நடத்திய அமெரிக்க மிச்சேல் ஆணையத்தின் அறிக்கையில் தெரிவித்துள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து இந்தப் பேச்சுகளில் ஆராயப்பட உள்ளது.

## ஆந்திராவில் கட்டடம் இடிந்து 25 பேர் பலி!

ஹைதராபாத், மே 28

இந்தியாவின் ஆந்திர மாநிலம் கடம்பாவில் அடுக்கு மாடிக்கட்டடத்தில் கட்டுமாணப் பணிகள் நடைபெற்ற சமயத்தில், கட்டடம் இடிந்து விழுந்தது.

இதில் கட்டடத் தொழிலாளர்கள் 25பேர் உடல் நசுங்கி இறந்தனர். மேலும் 50 பேர் வரை கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## உலக அரங்கில்

## பொலீஸில் வருகையைப் பதிவு செய்யும்

# வெளிநாட்டவர்களுக்கான விதி இந்தியாவில் தீவிரமாக அமுல்

சென்னை, மே 28

இந்தியாவுக்குள் வெளிநாட்டவர்களுக்குத் தங்குமிட வசதிகளை அளிப்பவர்கள், அந்த வெளிநாட்டவர்களைப் பற்றிய விவரங்களை, அவர்கள் நாட்டுக்குள் நுழைந்து 24 மணித்தியாலங்களுக்குள் அருகில் உள்ள பொலீஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இவ்வாறு இந்திய உள்துறை அமைச்சு நாளிதழ்களில் விளம்பரப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே இந்தியாவில் இத்தகைய விதிகள் நடைமுறையில் இருப்பதாகவும் —

இனிவரும் காலங்களில் இந்த விதிகள் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் —

உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் இந்த விதிகள் பொருந்தும் போதும் ஈழத்தமிழர்கள் தொடர்பாகவே இவை தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

உள்துறை அமைச்சகத்தின் விதிகள் தமிழகத்தில் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டால், அது ஈழத் தமிழ் அகதிகளுக்கு எதிரான ஒரு மனநிலையை தோற்றுவிக்கும் என்று தமிழக எழுத்தாளர் ரவிக்குமார், பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அ.தி.மு.க. தமிழகத்தில் ஆட்சியமைத்த உடனேயே பயங்கரவாதம் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படும் என்று அறிவித்ததைச் சுட்டிக்காட்டிய அவர் பயங்கரவாதிகள் என்றாலே ஈழத்தமிழ் அகதிகளைத்தான் அ.தி.மு.க. அரசு குறிப்பிடுவதாகக் கருத வேண்டியுள்ளது என்றும் தெரிவித்தார்.

(ம-6-9)

## தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் சிறையில் உண்ணாவிரதம்

சென்னை, மே 28

தமிழகச் சட்டப் பேரவையின் முன்னாள் துணை சபாநாயகரும், தி. மு. க. சட்டமன்ற உறுப்பினருமான பரிதி இளம் வழுதி வேலூர் சிறையில் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி தமிழக சட்டப் பேரவைத் தேர்தலின் வாக்குப்பதிவு இடம் பெற்றபோது சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ. தி. மு. க. கூட்டணி வேட்பாளர் ஜோன்பாண்டியனின் வாக்குப்பதிவு முகவரைத் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட பரிதிஇளம்வழுதிவேலூர்சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கீழ் நீதிமன்றம் தன்னை பிணையில் விடுவித்த போதும் கூட சென்னை உயர் நீதிமன்றம் தடைவிதித்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பரிதிஇளம்வழுதி உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்.

(ஒ-6-9)

## இந்திய அமைச்சர் ரஷ்யா விஜயம்

புதுடில்லி, மே 28

இராணுவத் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான கூட்டுக் குழுவின் முதலாவது கூட்டத்தில் கலந்துகொள்ள இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் வெளிபுறவு அமைச்சர் ஜஸ்வந்த்சிங் அடுத்த மாதம் 3 ஆம் திகதி ரஷ்யா செல்கிறார்.

(ஒ)

## 12ஆண்டுகளில் முதல் முறையாக

# இந்திய கிரிக்கெட் அணியினர் பாகிஸ்தான் செல்கின்றனர்

கராச்சி, மே 28

ஆசிய 'டெஸ்ட்' கிரிக்கெட் சம்பியன் போட்டிகளில் பாகிஸ்தானில் அந்த நாட்டுக் கிரிக்கெட் அணிக்கு எதிராக இந்திய கிரிக்கெட் அணி விளையாடும் என்று இந்தியா அறிவித்துள்ளது.

இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் ஏ. சி. முத்தையாவைச் சந்தித்துப் பேசிய பின்னர் பாகிஸ்தானியக் கிரிக்கெட் சபைத் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் ஷியா கராச்சியில் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 13-17 திகதிகளில் இந்த டெஸ்ட் போட்டி இடம் பெறவுள்ளது.

12 ஆண்டுகளின் பின்னர் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பாகிஸ்தானில் நடைபெறவுள்ள முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இதுவாகும்.

1989 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இந்திய அணி அந்த நாட்டு அணியை எதிர்த்து விளையாடியது. 1997 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணி இந்தியாவில் போட்டிகளில் கலந்து கொண்டது.

(ஒ-6-9)

# போதைப்பொருள் ஒழிப்பு விடயத்தில் தலிபான்களின் மீது ஐ.நா. சந்தேகம்

## விலைகளை அதிகரிக்கும் தந்திரமாம்

நியுயோர்க், மே 28

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான் அரசின் போதைப் பொருள்கள் தயாரிப்புக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து ஐ. நா. சந்தேகம் எழுப்பியுள்ளது.

தீவிர இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்தப் போவதாகக் கூறிவரும் தலிபான்கள், ஒப்பியம் தயாரிக்கப் பயன்படும் பொப்பிச் செடிகள் மற்றும் கஞ்சாச் செடிகள் ஆகியவற்றை அழிக்குமாறு விவசாயிகளுக்கு உத்தரவிட்டனர். பெருமளவு நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த, போதைப் பொருள் உற்பத்திக்குப் பயன்படும் செடிகள் அழிக்கப்பட்டதாகவும் தலிபான்கள் அறிவித்திருந்தனர்.

ஆனால், தலிபான்களின் இந்த நடவடிக்கைகள்குறித்து ஐ.நா. வெளியிட்ட அறிக்கையில் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

போதைப் பொருள்களுக்கு எதிரான தலிபான்களின் பிரசாரம், சர்வதேச போதைப் பொருள் சந்தையில் கஞ்சா உட்படப் போதைப் பொருள்களின் விலைகளை அதிகரிக்கச் செய்யும் தந்திரம் என்றும் —

தலிபான் அரசு பெருமளவு கஞ்சாவை சேமித்து வைத்திருப்பதாகவும் — தனது அறிக்கையில் ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு கஞ்சா மற்றும் ஹெரோயினின் விலைகள் 10 மடங்கு அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் ஐ. நாவின் குற்றச்சாட்டுகளை தலிபான் அரசு மறுத்துள்ளது.

(ஒ-6-9)

## மதுரையில் எயிட்ஸுக்கு மாணவி பலி!

தமிழகத்தின் மதுரை நகரில் 23 வயது மாணவி ஒருவர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

வெளிநாட்டிலிருந்து வந்து மதுரையில் தங்கிக் கல்வி கற்று வந்த மாணவியே இறந்தவராவார்.

## தீவிரவாதிகளுடன் மியான்மார் படை மோதல்

யாங்கூன், மே 28

இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்புற மாநிலத்தில், பிரிவினை கோரிப் போராடி வரும் தீவிரவாதிகளுக்கும், மியான்மர் நாட்டு இராணுவத்துக்கும் இடையே மோதல் நிகழ்ந்துள்ளது.

இந்த மோதலில் மியான்மா வீரர்களில் 50 பேரைத் தாம் கொன்றுவிட்டதாகத் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா சபாரத்தினம்

(முன்னாள் றமணி ரெக்ஸ்ரைல், உரிமையாளர்)

திருநெல்வேலி பிள்ளையார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சபாரத்தினம் நேற்று (27-05-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் தம்பையா ஆச்சிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவரத்தினம், பரிமளகாந்தி, சோதிமணி மற்றும் குருமணி (கொழும்பு), ராசேந்திரன் (இளைப்பாறிய அதிபர், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சுப்பையா, கிருஷ்ணசாமி, செல்லையா மற்றும் பரிமளகாந்தியின் (இளைப்பாறிய ஆசிரியர், கொழும்பு) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-05-2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**மருமக்கள்.**

K. சிவானந்தன்
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

(88348)

மண்கும்பான்

## திருமதி அருளம்பலம் பூமணி

மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளம்பலம் பூமணி நேற்று (27-05-2001) ஞாயிறு காலை 7 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் அருளம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விரசுத்தி—சிவக்கொழுந்துவின் அருமை மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை– அம்மப்பிள்ளையின் அன்புமருமகளும் தங்கம், சுப்பிரமணியம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகரட்ணம் (மராசுறி மார்சட் பெரிய கடை யாழ்.), கலியுகவரதன் (பிரர்ன்ஸ்), பரமேஸ்வரி காலஞ்சென்ற பராசக்தி. மற்றும் யோகேஸ்வரி, றாகினிதேவி (பிரான்ஸ்), றஞ்சனாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அருமைத்தாயாரும், மகாலிங்கசிவம், (ஓய்வுபெற்ற ஊழியர், யாழ். தொழில்நுட்பக்கல்லூரி) காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், குழந்தைவேலு, கமலேஸ்வரி மற்றும் தங்கேஸ்வரன் (பிரான்ஸ்), புவனேந்திரன் (சுவிஸ்), றஞ்சினிதேவி, மாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28-05-2001) திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**A.கனகரட்ணம்**
(மகன்)

NO. 145, கொழும்புத்துறை வீதி,
சந்நமாதா கோயில் அருகில்,
சுண்டுக்குளி.

(88833)

## சின்னத்தம்பி முருகேசு

(முன்னாள் ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகஸ்தர்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், உடுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முருகேசு நேற்று(27-5-2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சின்னப்பிள்ளை ஆகியோரின் மகனும், இராசையா– பவளரத்தினத்தின் மூத்த மருமகனும் லோசினிதேவியின் பாசமிகு கணவரும் ஜெயக்குமார் (கனடா), ஜெயந்தா, ஜெனிதா, ஜொசிலன் (கனடா), ஜெயநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மைதிலி (கனடா), ஸ்ரீதர், கிரிதரன் (வலயக் கல்வி உத்தியோகத்தர் சாவகச்சேரி) ஆகியோரின் மாமனாரும், கனகம்மா, இராசமணி, கந்தையா ஆகியோரின் சகோதரரும், தவநாதன் (ஓய்வுபெற்ற மின்சார உத்தியோகஸ்தர்), சுகுணாதேவி (கனடா) கருணாதேவி, இரஞ்சினிதேவி, சுபத்திராதேவி (பிரான்ஸ்), லோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் கமலேஸ்வரி, ராணி (ஜேர்மனி), லோகேஸ்வரன் (கனடா), கந்தசாமி, அருமைத்துரை, சத்தியரஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும், பதிப், நிவேந், பானுஉஷா, நிதான், பிதுஷனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28-05-2001) திங்கட்கிழமை 12-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சங்கமபுலவு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**றோகினிதேவி** (மனைவி)

**ஸ்ரீதர், கிரிதரன்**
(மருமக்கள்)

**தவநாதன் மற்றும் உறவினர்கள்.**

தற்காலிக முகவரி:–
இ. தவநர்தன் (மின்சாரசபை)
கற்பக்குணை உடுவில்,
சுன்னாகம்.

(88347)

சிறிலங்கா - இந்தியா இணக்கம்:

# கடல் எல்லையைத் தாண்டும் மீனவர்கள் மீது சுடுவதில்லை!

## யாழ். கடற்படைத் தளபதி தகவல்

கொழும்பு, மே 28

இலங்கை, இந்திய மீனவர்கள் தத்தமது நாடுகளின் கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடித்தாலும் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதில்லை என இரண்டு நாடுகளும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

வடபிராந்தியக் கடற்படைத் தளபதி கொமடோர் ஜெ. எச். உபாலி ரணவீர இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

நேற்று முன்தினம் தீவுப் பகுதிக்கு விஜயம் செய்த தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களுக்கான செய்தியாளர் மாநாடு காங்கேசன்துறையில் உள்ள கடற்படையினரின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

அந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே கடற்படைத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அப்போது மேலும் தெரிவித்ததாவது:

மீன்பிடியின் போது மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டுவது குறித்து அண்மையில் இந்திய — இலங்கை கடற்பரப்பில் வைத்து சென்னைக் கடற்படைத் தளபதியுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இதன் போது எந்த நாட்டு மீனவர்களாயினும் எல்லைகளைக் கடந்தால் அவர்களைக் கைது செய்வதென முடிவு எடுக்கப்பட்டது.

இலங்கையின் கடல்வலயத்தினுள் இந்திய மீனவர்கள் சட்டவிரோதமான முறையில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வது இலங்கை மீனவர்களைப் பாதிப்பதுடன் இலங்கைக் கடற்படையினருக்கும் பல்வேறு அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகிறது.

எனினும் இந்த இரு நாடுகளுக்கும் இடையில் நெருக்கமான உறவு காணப்படுவதால் இலங்கைக் கடற்படையினரால் கடும் நடவடிக்கை எடுக்க முடிவதில்லை என்று தளபதி தெரிவித்தார்.(ஐ–7))

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை:

# முழுதாக நிறைவுசெய்யப்படாத விண்ணப்பங்கள் திரும்பிவந்தன

யாழ்ப்பாணம், மே 28

யாழ். மாவட்டத்தில் இருந்து 2001 ஆம் ஆண்டில் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கென தனிப்பட்ட ரீதியில் விண்ணப்பித்த 75 பேரின் விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் திரும்ப அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பூரணமாகப் பூர்த்தி செய்யப்படாத மற்றும் ஒப்பமிடைகள் சமர்ப்பிக்காத விண்ணப்பப் படிவங்களே இவ்வாறு யாழ். கல்வி வலயத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அவை தற்போது உரியவர்களின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் தமது பகுதிப் பாடசாலை அதிபர்கள் ஊடாகப் பூர்த்தி செய்துதேவையான விடயங்களை சமர்ப்பித்து மீண்டும் எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேரடியாகப் பரீட்சைத் திணைக்களத்துக்குத் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியாதவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

(சு–10)

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

தலைவர் **திரு. பெ. கனகரத்தினம்** தலைமையில் 09–06–2001 சனிக்கிழமை காலை 10. 00 மணிக்கு யாழ். ப. நோ. கூ. சங்கக் கேட்போர் மண்டபத்தில் நடைபெறும். சங்க அங்கத்துவப் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**சி. மகேந்திரன்**
செயலாளர்

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(88333)

## SUBRA (14) வெற்றிக்கிண்ண ஹொக்கி சுற்றுப்போட்டி - 2001

பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் Subra (14) கல்வி நிறுவன ஆதரவுடன் நடத்தும் Subra (14) வெற்றிக்கிண்ணத்துக்கான 7 பேர் கொண்ட ஹொக்கி சுற்றுப்போட்டி.

இப்போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: — 31-05-2001
அணித்தெரிவு: — 01-06-2001
பிற்பகல் 4-30 மணிக்கு உடற்கல்வி அலகில் இடம்பெறும்.

**விளையாட்டு அவை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(சி/16892)

## கண்ணீர் அஞ்சலி

கலாபூஷணம் தேர் மன்னன்

**ஆறுமுகம் ஜீவரட்ணம்** ஆசாரியார்
(சிற்பச் சக்கரவர்த்தி)

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நாதஸ்வர, தவில் கலைஞர்கள்,**
**இலங்கை இசை வேளாளர் சங்கம்,**
**இணுவில்.**

(88332)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே28

யாழ். சிறாம்பியடி ஞான வைரவப் பெருமான் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள இந்த உற்சவத்தின் இறுதிநாளான எதிர்வரும் 9ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெறும்.

(சு-10)

★ ★ ★

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித்தொடர்ந்து 25தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், 21ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (சு-11)

★ ★ ★

நீர்வேலி தெற்கு, பூதர்மடம் பகுதியில் உள்ள ஞான வைரவர் ஆலயத்தின் வைகாசிப் பொங்கல் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

முற்பகல் 10. 00 மணிக்கு ஆலயத்தில்விசேட அபிஷேகம் மற்றும் பொங்கல் நிகழ்வு இடம்பெறும். (சு-17)

★ ★ ★

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய யந்திரபூசை தினமும் அதிகாலை முதல் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள கும்பாபிஷேகத்தை முன்னிட்டு யந்திர பூசை நாற்பத்தைந்து தினங்கள் இடம்பெற்று வருகின்றது. சிவஸ்ரீ சு. சுந்தரராசக் குருக்கள் கிரியைகளை நிகழ்த்தி வருகின்றார்.

## பாடசாலைக்கு நிதியுதவி

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பளைக் கல்விக் கோட்டப் ,பாடசாலைகள் மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்குத் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா 38 லட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளார்.

- சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு 20 லட்சம் ரூபாவும் -

பளைப் பிரதேச பாடசாலைகளுக்கு 18 லட்சம் ரூபாவும் -

நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக ஈ.பி.டி.பி. தென்மராட்சி அமைப்பாளர் சூ.அலெக்ஸாண்டர் தெரிவித்தார். (ஐ-117)

## பாம்பு தீண்டியது


கட்டுக் கட்டாக வைக்கப்பட்டிருந்த வெங்காயப் பிடிகளை எடுத்துக்கொண்டிருந்தவர் வெங்காயக் கட்டுக்குள் மறைந்திருந்த புடையன் பாம்பினால் கடியுண்ட சம்பவம் புலோலி மேற்கு பத்தனையில் இடம் பெற்றது. இதேயிடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வசந்தரூபன் (வயது -28) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். (ஐ-117)

### கைகொடுத்தல் அறிவித்தல்

**96/97 காலப்பகுதியில் காணாமல் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த, நிதி உதவி வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களை எதிர்வரும் புதன்கிழமை (30.05.2001) நண்பகல் 12.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின் றோம்.**

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம்.

## காணவில்லை



### திருமதி வெற்றிவேல் இராஜேஸ்வரி

என்ற 40 வயதான இவரை கடந்த 25.05.2001 முதல் காணவில்லை. இவர் ஒரு மன நோயாளி. இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கங்களுக்கோ தயவுசெய்து அறியத்தரவும்.

T.p.:- 021 3277
070 213019
070 213014 (88344)

திரு.சி.வெற்றிவேல்,
*மந்திகை அம்மன் கோயிலடி,*
*புலோலி.*


**ராஜா**
யாழ்ப்பாணம்
அஜீத், சிம்ரன்
மற்றும் பலர் நடித்த
**உன்னைக் கொடு என்னைத் தருவேன்**
காட்சிகள் தினசரி : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் 10.30, 2.00, 5.00 (பு.நே)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
எம்.ஜீ.ஆர். (இருவேடங்கள்)
சரோஜாதேவி, நம்பியார்
நடித்த
**எங்க வீட்டுப் பிள்ளை**
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)
ஓரிரு தினங்கள் மட்டும்.

**லஷ்சுமி**
இணுவில்
அஜித் ,லைலா
மற்றும் பலர் நடிப்பில்
**தீனா**
(ரீல்ஸ்)
காட்சிகள் தினசரி 10.30, 2.30 (பு.நே.)
சனி, ஞாயிறுகளில்
10.30, 2.00, 5.00 (புதியநேரம்)


# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமு கிருஷ்ணபிள்ளை

*(ஓய்வுபெற்ற அதிபர்)*

அல்வாய் வடக்கு, அணியாவோடையைச் சேர்ந்த கதிர்காமு கிருஷ்ணபிள்ளை நேற்று (27.05.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கதிர்காமுவின் மகனும், திரு.திருமதி பொன்னர் அவர்களின் மருமகனும், திருமதி கி.பவளம் அவர்களின் அன்புக் கணவரும் கி.சப்தகிரிநாதன், யோ.யோகாம்பிகை (சுவிஸ்), பா.கிருஷ்ணவேணி (லண்டன்), சு.கலைவாணி (சுவிஸ்), கி.செந்தில்நாதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், மேகலா, காசினி, கிருஷா (சுவிஸ்), சுகன்யா, அர்ச்சுகி (லண்டன்), லக்சனன் (சுவிஸ்), பிரவீணா, நிரோஜன் (சுவிஸ்), சாண்டில்யன், தேவகி, காயத்திரி, திலோத்தமை, சாகித்தியன், காலஞ்சென்ற ஊர்வசி ஆகியோரின் பேரனும், யோகராஜா, பாஸ்கரன், சுகுமார், யோகராணி, நிர்மலாதேவி ஆகியோரின் மாமனாரும், சுப்பிரமணியம், பரம்பதி, தனாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2001) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வியாபாரிமூலையில் உள்ள சுப்பர்மடம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*ஆலங்கட்டை,*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.*

தகவல்:
S.ரவிக்குமார்
(மருமகன்)
(88328)

## முருகேசு குணபாலசிங்கம் (குணம்)

*(நுணாவில் மத்தி, சாவகச்சேரி)*

நுணாவில் மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு குணபாலசிங்கம் நேற்று முன்தினம் (26-05-2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - சிவபாக்கியம் தம்பதிகளின் புதல்வனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்களாகிய பிரதீபன், சிந்துஜா (தற்போது யாழ்ப்பாணக்கல்லூரி), சாவ.டிறிபேக்கல்லூரி மாணவன் கிருஷாந் (தற்போது யா/அராலி சரஸ்வதி ம.வி.) ஆகியோரது பாசமிகு தந்தையாரும் மு.துரைசிங்கம் (கனடா), திருமதி பத்மாவதி தர்மலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆ.தங்கராசா, ஆ.நாகராசா, திருமதி கலா சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நேற்று (27.05.2001) ஞாயிற்றுக்கிழமை அராலி மத்தியில் நடைபெற்று பூதவுடல் அராலி 'பூனாவடை' இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்காலிக முகவரி:
*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
**மனைவி,**
**பிள்ளைகள்.**
(88343)



# ம.விக்ரர் (யாழ்.ஜெயம்)

## அற்புதக் கவியின் உற்பவக் கடலே!

ஒரு நொடியில் கவி புனையும் கவிமணியே!
ஒரு நொடியில் ஓடி நீ மறைந்தா யையா!
கருவினைக் கொடுத்துவிட்டால் உன்கைபட்டு
கலையம்சம் உயிர்பெற்று மிளிருமையா!
உருகும் மெழுகு திரிபோல ஓயாமல்
ஓடித் தமிழ்ப்பணித் தாகம் தீர்த்தாயையா!
திருமகனின் அன்னைமேல் பாசம் வைத்தாய்
ஒருமகனாய் அவள்பதமே சென்று விட்டாய்!

இருவிழிகள் நீரினைச் சொரிந்திட்டாலும்!
"இதயவீணை" உந்தனின் இருப்பைக் கூறும்
குருவுக் கெல்லாம் நீ குருவாய் நின்றாய், தமிழ்
அன்னைக்கு அழகுசேர்க்கும் அம்மானைத் தந்தாய்!
ஒரு தூதுப் "புறாவே பற", "சிந்தை இனிக்குஞ்செல்வம்"
உன் சுந்தரத் தமிழினிற்•கோர் தேம்பாவணியாம்!
அரகினில் இருந்தும்மோடு மொழியுந் தமிழ்
அமிழ்த நூல்கள்பல ஆய்தற்(கு) சமமாம்!

தித்திக்கும் தீந்தமிழ் கவிஞ்னையா
தேடியுனை நாடாதார் யாருளரையா?
எத்திக்கும் புகழ் மணக்கும் உந்தன் கவிதை
கல்வி ஏடெல்லாம் ஓதுகின்ற பாடலையா!
வித்தகன் உந்தனுக்கு பட்டம் புகழா?
விதந்துரைக்க மறுத்தார் ஏன் அறியோமையா?
அத்தனை யுன்திறமை யென்று அறிந்திட்டாரோ?
ஆனாலும் நீ உலகத்தமிழ்க் கவிஞனையா!

மண்ணையும் மனிதத்தையும் கண்ணாய் மதித்தாய்
அண்ணலே உன்னிரக்கம் யாருக்கு வருமப்பா?
கண்ணியம் படைத்த ஆசான் காவலன் நீ
கவியுலகில் நீ ஒரு வரலாறையா!
எண்ணியே நாம் கலங்கிச் சோர்ந்திட்டாலும்
இறைபதம் நீ நிச்சயம் இருப்பாயையா!
விண்ணகம் நீ விரைந்துமே சென்றிட்டாலும்
வீசும் உன் தமிழ்க்கவிதைத் தென்றலையா!

கவியாக்கம்:
*யாழ்.ஜெயதாசன்* (88346)

**- அன்பு உள்ளங்கள்.**

# சமாதானப் பேச்சுக்களுக்கு ஈ.பி.டி.பி. தடையாக இருக்காது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

சமாதானப் பேச்சு நடைபெறுமாயின் ஈ.பி.டி.பி. அதனை நிச்சயம் வரவேற்கும். அதேவேளை தமிழ் பேசும் மக்களின் ஆதரவிலான கட்சி என்ற வகையிலும், மக்கள் எமக்கு அளித்த ஆணையின் அடிப்படையிலும் அந்த மக்களின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டு பிரச்சினைக்குத் தீர்க்கமான ஒரு தீர்வினைக்கான எமது பங்களிப்பையும் வழங்குவோம்.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் வெளியாகும் மாத சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பேச்சு முயற்சிகளுக்கு ஒரு போதும் ஈ.பி.டி.பி. கட்சி தடையாக இருக்கமாட்டாது. நோர்வேயின் முயற்சிகளை வரவேற்கின்றோம். அவர்கள் மத்தியஸ்தர்களாக இல்லை. ஏற்பாட்டாளர்களாகவே பங்காற்றுகின்றார்கள். இதில் அவர்களது நல்லெண்ணத்தையும் பாராட்டுகின்றோம். எனினும் ஏற்பாட்டாளர்கள் எனும் வகையில் அவர்களின் பங்களிப்பு ஒரு வரையறைக்கு உட்பட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே இம்முயற்சி வெற்றி பெறுவதென்பது நோர்வேயின் கைகளில் இல்லை. அது புலிகளின் நம்பிக்கை தரும் செயற்பாடுகளிலேயே உள்ளது என்றும் டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகு தடையை ஒரு தடையாகப் புலிகள் இறுதி நேரத்தில் கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாத தொன்று. பேச்சு வார்த்தையை முன்னெடுக்க இந்தத் தடை ஒரு போதும் தடையாக இருக்க முடியாது. தடையை ஒரு சாட்டாக வைத்து பேச்சை இழுத்தடிப்பதே புலிகளது உள்நோக்கம். அயர்லாந்திலும், பாலஸ்தீனத்திலும் இத்தகைய தடைச்சட்டம் அமுலில் இருந்த போதுதான் பேச்சு வார்தததை நடைபெற்றுத் தீர்வு காணப்பட்டது என்றும் டக்ளஸ் தெரிவித்தார். (ஐ)

### வடமராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ணாவிரதிகளுக்கு குளிர்பானம் வழஙகி உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்தார்.

இதற்கிடையில் -

உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட மனவர்களில் ஒரு பகுதியினர் இன்று காலை ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட தலைமைச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ தேவானந்தாவைச் சந்தித்து இது குறித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். மகஜர் ஒன்றையும் அவர்கள் அமைச்சரிடம் கையளிக்கவுள்ளனர். (ஐ-7-173)

Univac நிறுவனத்தின் மூன்றாவது

புதிய கிளை ஆரம்பம்

எமது நிறுவனம் வலி.கிழக்கு பிரதேச மக்களுக்கு கணனிப் பயிற்சியை வழங்கும் நோக்கில் உடுவில் நூலகத்துக்கு அருகில் புதியகிளை ஒன்றினை ஆரம்பித்துள்ளது. இக் கிளையின் முதலாவது பிரிவில் இணைந்துகொள்ளும் முதல் 50 மாணவர்களுக்கு பயிற்சிக் கட்டணத்தில் 50% சலுகை வழங்கூப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 03-06-2001

UNIVAC College of Computer Information Technology

Start 04-06-01 3.00 p.m.

Head office:
1201,K.K.S. Road,
Narchimar Kovil,
Jaffna. (88334)

Director
UNIVAC

New Brange:
அருளகம்,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

யாழ்.மாநகரசபைப் பகுதியில்

# கசிப்பு ஒழிப்புப் பணிக்கு விழிப்புக் குழுக்கள்

யாழ்.மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாநகர முதல்வர் என்.ரவிராஜ்.

சட்டவிரோத மது உற்பத்தி தொடர்பாக கடந்த புதனன்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுவோரை கண்காணிக்கவும், அவர்களுக் கெதிராக நடவடிக்கை எடுக்கவும் கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படும்.

விழிப்புக் குழுக்களில் இளைஞர்கள் இடம்பெறுவர். கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோர் மீது உடனடி நடவடிக்கை எடுக்கும் வகையில் இந்த விழிப்புக் குழுக்களுக்கு பொலீஸாரிடமிருந்து சில அதிகாரங்கள் பெற்றுக் கொடுக்கப்படும். அத்துடன் விழிப்புக் குழுவினரை இலகுவில் இனங்கண்டுகொள்ளும் வகையில் அவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படும் - என்றும் முதல்வர் தெரிவித்தார். (ஐ-7-4)

### தென்மராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கில் மக்களை மனித கேடயமாக்க முயல்கின்றது.

தொடர்ந்தும் போர் முனையாக - போர் ஓயாத இடமாக - இராணுவத்தின் போர் நடவடிக்கைத் தளங்கள் நிறைந்த இடமாகவே தென்மராட்சி காணப்படுகிறது. மிகவும் ஆபத்து நிறைந்ததாகவும் எந்நேரமும் எந்த இடத்திலும் உக்கிர போர் வெடிக்கக் கூடிய தயார் நிலையில் இராணுவம் உள்ளது. எனவே இந்த நயவஞ்சகச் சூழ்ச்சி வலையில் வீழ்ந்து விடாது தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அந்த அறிக்கையில் புலிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

### வடக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துக் கேட்டறிந்தது. அச்சமயமே அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்துக்கான பொருள்களைக் கொண்டு வருவதற்கென இயங்கிவரும் கப்பல் நிறுவனங்கள் கூடுதலான கட்டணத்தை அறவிடுகின்றன. இதனாலேயே குடாநாட்டின் வர்த்தக நிலையங்களில் சில பொருள்களுக்கான விலைகள் உயர்ந்துள்ளன.

சில தனியார் நிறுவனங்கள் பொருள்களைக் கப்பலில் ஏற்றுவதற்குக் கூட 'ஜீஎஸ்ரி' வரியை அறவிடுகின்றன. ஆனால் தென்பகுதிகளில் இவ்வாறு கட்டணம் அறவிடப்படுவதில்லை - என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ஐ-7)

### வவுனியா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராக சிவஞானம் வில்வராஜா என்பவர் தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டிய - புதிய நிர்வாகக் குழுவின் தெரிவு அப்போதைய செயலாளரான சிவநாதன் கிஷோர் கைது செய்யப்பட்டதை அடுத்து தடைப்பட்டிருந்தது.

1999 மே மாதம் கிஷோர் கைது செய்யப்பட்டார்.

அதன் பின்னர் வவுனியா அரச அதிபர் மற்றும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தலைமையக அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை ஒன்று சங்கத்தை நிர்வகித்து வந்தது.

நேற்று நடைபெற்ற புதிய நிர்வாகத் தெரிவுக்கான வாக்கெடுப்பில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் நாயகம் ஏ.ஈ.புளத்சிங்கவின் மேற்பார்வையில் நேற்றைய வாக்கெடுப்பு நடைபெற்றது. (ஐ)

இறுதிப் பயணத்தில் இணைந்திட....



மண்புகழ் கொண்டு
வாழ்ந்து
விண்புகழ் கண்ட
எமது ஆஸ்தானக் கவிஞர்

யாழ்.ஜெயம்

(ஆசிரியர் ம.விக்ரர்)

அவர்களின் புகழுடல் இன்று பி.ப. 2.45 மணிக்கு மன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பெற்றதன்பின் இறுதி நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு எமது மன்றத்தின் அனைத்து அங்கத்தவர்கள், கலைஞர்கள் அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
(C/16893)

- திருமறைக் கலாமன்றம்

அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்



திருமதி. இராஜேஸ்வரி சண்முகரட்ணம்

(முன்னாள் விரிவுரையாளர் அளுத்கம ஆசிரியர் கலாசாலை,
உதவிக்கல்விப் பணிப்பாளர் [யாழ் வலயம்])

அறிவுப் பெட்டகமே நல்ல ஆற்றலின் இருப்பிடமே!
சிறந்த சேவையாற்றிய சீரான பெண்மணியே!
கடமையே கண்ணெனக் கொண்ட உதவிக் கல்விப் பணிப்பாளரே!
காருண்ய சீலரே! எம் கலங்கரை விளக்கமே!
திடமான சிந்தனையும் நல்ல தேகாரோக்கியமும் கொண்டு வாழ
நாம் உளமாரப் போற்றுகிறோம்!
அறுபது அகவை தனில் அறுமுகனின் அருள்பெற்றெந்நாளும்
அகிலம் புகழவாழ அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்!

-நண்பர்கள்.-

சஞ்சிகை வெளியீட்டு விழா

அழைப்பு

முகாமை நோக்கு

இதழ் 5 & 6



பிரதம விருந்தினர்
பேராசிரியர் A.சண்முகதாஸ்
(பீடாதிபதி, உயர்பட்டப்படிப்புக்கள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்
திரு.மா.நடராஜசுந்தரம்
(பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

வெளியீட்டுரை:
திருமதி.நி.தர்மசீலன்
(தலைவர், முகாமைத்துவ துறை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

மதிப்பீட்டுரை:
திரு V.P. சிவநாதன்
(தலைவர், பொருளியல் துறை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இடம் : முகாமைத்துவ மண்டபம் III
காலம் : 28/05/2001 திங்கட்கிழமை
நேரம் : மாலை 3.00

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.05.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.